இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 40 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 01 – திங்கள்கிழமை 18 செப்டம்பர் 2023 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 40: Thiruvalluvar Year - 2054 - Purattasi 01 - Monday 18 September 2023 - Trichy ★★ 12 Pages ₹5.00

## வேலூரில் கழக முப்பெரும் விழா! கழகத் தலைவர் -

# முதல்வர் மு.க.ஸ்டாலின் விருதுகள் வழங்கினார்!

## கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் தலைமை! பொருளாளர் டி.ஆர்.பாலு - முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு - துணைப் பொதுச் செயலாளர்கள் வாழ்த்துரை!

**வேலூர், செப். 18-**

**வேலூரில் நேற்று தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா, தி.மு.க. பவள விழா, தி.மு.க. முப்பெரும் விழா கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விருதுகள் வழங்கி சிறப்புரை யாற்றினார்!**

இதுபற்றிய விவரம் வருமாறு:-



கொட்டும் மழையில் சென்னை ராபின்சன் பூங்காவில் நடந்த பொதுக்கூட்டத்தில் திரண்டிருந்த ஆயிரமாயிரம் பொதுமக்கள் முன்பாக, "திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிவிட்டது" என்று அறிவித்தார் பேரறிஞர் அண்ணா அவர்கள். 1949-இல் அவர் உருவாக்கிய இயக்கம், அண்ணாவின் கொள்கைத் தம்பிகளால் வளர்க்கப்பட்டு, அவரது தம்பிகளில் தலையாய தம்பியான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அரை நூற்றாண்டுக்கு மேல் கட்டிக் காக்கப்பட்ட இயக்கம்.

ஒரு மாநிலக் கட்சி முக்கால் நூற்றாண்டு காலம் தன் மக்களின் நலன் காக்க உறுதியாகப் போராடியும், இந்தியாவிலேயே முதன்முறையாக ஒரு மாநிலக் கட்சியால் அந்த மாநிலத்தில் மக்களின் பேராதரவுடன் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடிக்க முடியும் என்ற வரலாற்றுச் சாதனையை நிகழ்த்தியும், இந்தியாவுக்கே முன்னோடியான பலதிட்டங்களை வகுத்தும், சட்டங்களை உருவாக்கியும் இன்று இந்தியாவை வழி நடத்தக்கூடிய வகையில் தனக்கென தனித்துவமான இடத்தைப் பெற்றும் திகழ்கிறது என்றால் அந்தப் பெருமை நம் உயிராகவும், உதிரமாகவும் திகழ்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்திற்கே உரியது.

அந்த கம்பீரத்துடன், பேரறிஞர் அண்ணா கண்ட திராவிட முன்னேற்றக் கழகம் தனது 75-ஆவது ஆண்டினை - பவள விழாவினைக் கொண்டாட இருக்கிறது. அதுவும், முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டில். இதைவிட என்ன மகிழ்ச்சி நமக்கு இருக்க முடியும்?

வீரம் செறிந்த வேலூரின் அடையாளமாக கோட்டை இருப்பதுடன், வேலூர் எப்போதும் தி.மு.கழகத்தின் கோட்டைதான் என்பதைப் பல்வேறு களங்களில் நிரூபித்திருக்கிறது. கழகப் பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன் அவர்களை நமக்கு வழங்கியுள்ள கோட்டை. தனது மாணவப் பருவத்திலேயே மொழிப்போர்க் களம் கண்டு, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாக, அவரின் நிழலாக, கழகத்தின் வளர்ச்சிக்குத் தன்னை ஒப்படைத்துக் கொண்டு, கொள்கைத் தடம் மாறாமல் பயணிக்கின்ற பொதுச் செயலாளர் அவர்களின் தலைமையில் வேலூரில் முப்பெரும் திருவிழா - கழகப் பவள விழா நடைபெற்றது.

விழாவிற்கான பணிகளை மாவட்டக் கழகச் செயலாளர் நந்தகுமார் அவர்களும் கழக நிர்வாகிகளும் இணைந்து சிறப்பாக மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் முதல்வரின் அழைப்பின்படி, தி.மு.க. தலைமைக் கழகம் சார்பில் தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா - தி.மு.க. பவள விழா ஆண்டு - தி.மு.க. முப்பெரும் விழா 2023 - வேலூர் பள்ளிகொண்டாவில் நேற்று (17.9.2023 - ஞாயிறு) மாலை 5 மணியளவில் நடைபெற்றது.

**பரிசு வழங்கும் விழா!**

முத்தமிழறிஞர் கலைஞர் அறக்கட்டளை சார்பில் கழக விருதுக்காக தமிழகத்தில் உள்ள நான்கு மண்டலங்களில் ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் ஆகியவற்றில் கழகப் பணியில் சிறப்பாக செயல்படும் தலா ஒருவருக்கு நற்சான்று, பணமுடிப்பினை கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி சிறப்பித்தார்.

**விருது வழங்கும் விழா!**

விருது வழங்கும் விழாவில் வேலூர் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. வரவேற்றார்.

கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் விழாவிற்கு தலைமை வகித்தார்.

இவ்விழாவில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பெரியார் விருதை கி.சத்தியசீலனுக்கும், அண்ணா விருதை க.சுந்தரத்திற்கும், கலைஞர் விருதை ஐ.பெரியசாமிக்கும், பாவேந்தர் பாரதிதாசன் விருதை திருமதி மலிகா கதிரவனுக்கும், பேராசிரியர் விருதை ந.இராமசாமிக்கும் வழங்கிச் சிறப்புரை யாற்றினார்.

இவ்விழாவில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணைப் பொதுச் செயலாளர்கள் முனைவர் க.பொன்முடி, ஆ.இராசா, கனிமொழி கருணாநிதி, அந்தியூர் செல்வராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

வேலூர் மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. நன்றி கூறினார்.

இவ்விழாவில் அமைச்சர் பெருமக்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், கழக முன்னணியினர் சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் திரளாகப் பங்கேற்று சிறப்பித்தனர்.

---

## காவிரி நீர்: ஆதாரமற்ற அறிக்கைகளை கர்நாடக அரசு வெளியிடுவதா? தமிழ்நாட்டிற்கு உரிய நீரை திறந்துவிடக் கோரி

# அனைத்துக் கட்சி எம்.பி.க்கள் ஒன்றிய அமைச்சரிடம் மனு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!

**சென்னை, செப். 18-**

**"காவிரி நீர் அளிக்காததற்கு உண்மைக்குப் புறம்பான பல காரணங்களை ஒன்றிய சல்சக்தி அமைச்சரிடம் கர்நாடக அரசு தெரிவித்திருப்பது தொடர்பாக தமிழ்நாட்டின் அனைத்துக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனு ஒன்றினை ஒன்றிய ஜல்சக்தி அமைச்சரிடம் அளிப்பார்கள்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.**

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



காவிரி நதிநீர் பிரச்சினையில் நீண்டகால சட்டப் போராட்டத்திற்குப் பிறகு, ஒரு சராசரி ஆண்டில் பில்லிகுண்டுலுவில் கர்நாடகா வழங்க வேண்டிய மாதாந்திர நீர் அளவின் கால அட்டவணை, உச்சநீதிமன்றத்தின் 16.02.2018 தேதியிட்ட தீர்ப்பின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது.

மேலும், 05.02.2007 தேதியிட்ட காவிரி நடுவர் மன்றத்தின் (CWDT) இறுதித் தீர்ப்பு மற்றும் 16.02.2018 தேதியிட்ட உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின்படி, பற்றாக்குறை ஆண்டில், அதற்கேற்ற விகிதாச்சார (pro rata sharing) அடிப்படையில் சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு இடையே நீர் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும். அதன்படி இந்த ஆண்டில் 14.9.2023 வரை தமிழ்நாட்டிற்கு அளிக்கப்பட வேண்டிய 103.5 டி.எம்.சியில் 38.4 டி.எம்.சி. மட்டுமே கிடைத்துள்ளது. இது 65.1 டி.எம்.சி குறைவு ஆகும்.

**உச்சநீதி மன்றத்தில் மனு!**

மேட்டூர் நீர்த்தேக்கத்தின் 69.25 டி.எம்.சி. நீர் இருப்பு, இந்திய வானிலை ஆய்வுத்துறையின் (IMD) இயல்பான மழைப்பொழிவு அறிக்கை மற்றும் உச்சநீதிமன்றத்தின் உத்தரவு களின் அடிப்படையில் பெறப்பட வேண்டிய நீர் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, குறுவை பயிரிடுவதற்கும், சம்பா பயிர்களுக்கான ஆயத்தப் பணிகளைத் தொடங்குவதற்கும் ஏதுவாக, 12.06.2023 அன்று நீர் திறக்கப்பட்டது.

**கர்நாடக அரசின் தவறான கருத்து!**

கர்நாடக அரசு, தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய பங்கை, விகிதாச்சாரப்படி கூட விடுவிக்காததாலும், உச்சநீதிமன்ற ஆணையின்படி ஏற்படுத்தப்பட்ட காவிரி நீர் மேலாண்மை ஆணையம் (CWMA) மற்றும் காவிரி நீர் முறைப்படுத்தும் குழு (CWRC) ஆகியவற்றால் இதற்குத் தீர்வு காண முடியாததாலும், தமிழ்நாடு அரசு 14.08.2023 அன்று உச்சநீதிமன்றத்தில் ஒரு மனுவை தாக்கல் செய்தது. இம்மனு விசாரிக்கப்பட்டு வருகிறது.

இதற்கிடையில், தமிழ்நாட்டின் கோரிக்கை நியாயமற்றது என்றும், தமிழ்நாடு தனது ஆயக்கட்டை அதிகப்படுத்தி உள்ளது என்றும் ஆதாரமற்ற அறிக்கைகளை கர்நாடக அரசு வெளியிட்டுள்ளது. மேலும், கர்நாடக அரசு ஒன்றிய ஜல் சக்தி அமைச்சர் அவர்களுக்கு 13.09.2023 அன்று எழுதிய கடிதத்தில், தமிழ்நாட்டிற்கு வடகிழக்கு பருவமழை காலத்தில் போதுமான மழை கிடைக்கும் எனவும், காவிரி டெல்டாவில் தேவையான அளவு நிலத்தடிநீர் இருக்கிறது எனவும் தவறான கருத்துக்களை தெரிவித்துள்ளார்கள்.

**அமைச்சர் துரைமுருகன் அளிக்கிறார்!**

இத்தகைய உண்மைக்குப் புறம்பான அறிக்கைகளை ஒன்றிய அரசு கருத்தில் கொள்ளக்கூடாது என்று வலியுறுத்தி ஒரு கோரிக்கை மனுவை (Memorandum), ஒன்றிய ஜல்சக்தி அமைச்சர் அவர்களிடம் தமிழ்நாட்டின் அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அளிக்க உள்ளார்கள்.

தற்போது, 13.09.2023 முதல் 15 நாட்களுக்கு, கர்நாடக காவிரிப் பகுதியில் சராசரி இயல்பான மழை இருக்கும் என இந்திய வானிலை ஆய்வு துறை (IMD) அறிக்கையின் அடிப்படையில் காவிரி நீர் முறைப்படுத்தும் குழு (CWRA) கணித்துள்ள நிலையில், தமிழ்நாட்டிற்கு விநாடிக்கு 12,500 கனஅடி நீரை கர்நாடகா விடுவித்திட காவிரி நீர் மேலாண்மை ஆணையம் (CWMA) உத்தரவிட வேண்டும் என ஒன்றிய ஜல் சக்தி அமைச்சர் ஆணையத்திற்கு அறிவுறுத்த வேண்டும் என்றும், CWMA/CWRC அளித்த உத்தரவின்படி தமிழ்நாட்டிற்கு குறிப்பிட்டுள்ள நீரை குறித்த காலத்தில் வழங்குமாறு கர்நாடகாவிற்கு தகுந்த அறிவுரையை வழங்கிட வேண்டும் என்றும் இம்மனுவில் வலியுறுத்தப்படும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

முற்றிலும் தோல்வியுற்ற பா.ஜ.க. அரசை எதிர்கொள்ள நாடாளுமன்றத்தில் "இந்தியா" கூட்டணியுடன் இணைந்து

# ஜனநாயகத்தைக் காத்திடுவோம்!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற கழக எம்.பி.க்கள் கூட்டத்தில் தீர்மானம்!

**சென்னை, செப். 18–**

**"முற்றிலும் தோல்வியுற்ற ஒன்றிய பா.ஜ.க. அரசை எதிர்கொள்ள 'இந்தியா' கூட்டணியுடன் இணைந்து நாடாளுமன்றத்தில் ஜனநாயகத்தைக் காத்திடுவோம்" என்று கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:–

### முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பாராட்டு!

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் பிறந்த நாளில் – தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டில், வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கத்தக்க "கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை" துவக்கி வைத்து – ஒரு கோடிக்கும் மேற்பட்ட மகளிரின் குடும்பங்களில் மகிழ்ச்சியை ஏற்படுத்திய தமிழ்நாட்டின் முதலமைச்சரும், திராவிட முன்னேற்றக் கழக தலைவருமான தளபதி அவர்களுக்கு இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நன்றியை – பாராட்டுதலை தெரிவித்துக் கொள்கிறது.

காவிரி நதிநீர் பிரச்சினையில் நடுவர் மன்றமும், உச்சநீதிமன்றமும் அளித்துள்ள தீர்ப்புகளை பொருட்படுத்தாமல், மழை குறைபாட்டைக் காரணம் காட்டி, தமிழ்நாட்டின் பங்கான நீரை கர்நாடக மாநிலம் விடுவிக்காததால் குறுவைப் பயிர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, சம்பா பயிரும் கேள்விக்குறியாகி உள்ளது. எனவே உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி தமிழகத்திற்குச் சேர வேண்டிய நீரை உடனடியாக விடுவிக்குமாறு கர்நாடக அரசுக்கு ஒன்றிய அரசு வலியுறுத்திட வேண்டும் எனக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

### உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு ஒன்றிய அரசு தடைக்கல்!

ஒன்றியத்தில் பா.ஜ.க. அரசு பொறுப்பேற்றதிலிருந்து, தமிழ் நாட்டிற்கான திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை. மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையை முடக்கி வைத்திருப்பது போல் – இரண்டாவது கட்ட சென்னை மெட்ரோ ரயில் பணிக்கான நிதி ஒதுக்கீட்டையும் செய்யவில்லை. முதலமைச்சர் அவர்கள் பிரதமரின் முதல் சந்திப்பிலேயே வலியுறுத்தியும், இன்றுவரை ஒன்றிய அரசின்அமைச்சரவைக்கூட்டத்தில் வைக்காமல் இழுத்தடித்து, தமிழ் நாட்டு உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு ஒன்றிய அரசு தடைக் கல்லை ஏற்படுத்தி வருகிறது.



முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், தி.மு.க. மக்களவை – மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம், நேற்று முன்தினம் (16.9.2023), காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நடைபெற்றது. அப்போது கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., மற்றும் கழக மக்களவை – மாநிலங்களவை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

> **ஒன்றியத்தில் பா.ஜ.க. அரசு பொறுப்பேற்றதிலிருந்து, தமிழ் நாட்டிற்கான திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை. மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையை முடக்கி வைத்திருப்பது போல் – இரண்டாவது கட்ட சென்னை மெட்ரோ ரயில் பணிக்கான நிதி ஒதுக்கீட்டையும் செய்யவில்லை. முதலமைச்சர் அவர்கள் பிரதமரின் முதல் சந்திப்பிலேயே வலியுறுத்தியும், இன்றுவரை ஒன்றிய அரசின் அமைச்சரவைக் கூட்டத்தில் வைக்காமல் இழுத்தடித்து, தமிழ்நாட்டு உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு ஒன்றிய அரசு தடைக்கல்லை ஏற்படுத்தி வருகிறது.**

பா.ஜ.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்ட நீட் தேர்வால், தமிழ்நாட்டில் தற்கொலைகள் அதிகரித்து வருகிறது. தமிழ்நாடு சட்டமன்றமே நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளிக்க மசோதாவை இரண்டு முறை ஒருமனதாக நிறைவேற்றி, குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்த பிறகும் ஒன்றிய அரசு அந்த மசோதாவிற்கு இன்னும் ஒப்புதல் அளிக்காமலேயே இருப்பது பா.ஜ.க. ஆட்சி தமிழ்நாட்டிற்கு செய்து வரும் மாபெரும் துரோகம். நீட் தேர்வு மசோதாவிற்கு உடனடியாக ஒப்புதலை அளித்திட தொடர்ந்து நாடாளுமன்றத்தில் தி.மு.க. குரல் எழுப்பும்.

### மகளிர் மசோதாவை நிறைவேற்ற வலியுறுத்தல்!

பெண்ணுரிமை வழங்குவதில் தலைசிறந்த மாநிலமாக மட்டுமின்றி "கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை" பேரறிஞர் அண்ணா பிறந்த நாளன்று செயல்படுத்தியுள்ள சூழலில், நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களில் மகளிருக்கு 33 விழுக்காடு பிரதிநிதித்துவம் அளிக்கும் மசோதா பற்றி வாயே திறக்காமல் காலத்தை கழித்துள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், இன்று அவர் வழியில் செயல்படும் முதலமைச்சர் அவர்களும் மகளிர் மசோதாவை நிறைவேற்றக் கோரி எண்ணற்ற முறை கோரிக்கைகள் வைத்தும் அதன் மீதான விவாதத்திற்கு கூட பா.ஜ.க. அரசு தயாராக இல்லை. எனவே இந்த சிறப்புக் கூட்டத்தில் நாடாளுமன்றத்திலும், சட்டமன்றங்களிலும் 33 விழுக்காடு மகளிருக்கு பிரதிநிதித்துவம் அளிக்கும் மசோதாவை நிறைவேற்ற வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் வலுவாக குரல் எழுப்ப இக்கூட்டம் முடிவு செய்துள்ளது.

இந்தியாவிற்கே முன்னோடியாக சமூகநீதிக்கான குரல் எழுப்பும் நமது இயக்கம், இச்சிறப்பு கூட்டத்தொடரில், **"மண்டல் கமிஷன் பரிந்துரைப்படி ஒன்றிய அரசின் துறைகளில் முழு ஒதுக்கீட்டை செயல்படுத்த வேண்டும்", "அரசு துறைகளில் பதவி உயர்விலும் இடஒதுக்கீடு வழங்க வேண்டும்", "தனியார் வேலைவாய்ப்புகளில் இட ஒதுக்கீட்டை அமல்படுத்திட வேண்டும்", "பிற்படுத்தப் பட்டோருக்கு உள்ள கிரீமிலேயரை 25 லட்சமாக உயர்த்த வேண்டும்", "உயர்நீதிமன்ற, உச்சநீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் சமூகநீதி அடிப்படையில் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும்"**

உள்ளிட்ட கோரிக்கைகளோடு "இட ஒதுக்கீட்டிற்கு உள்ள 50 விழுக்காடு உச்சவரம்பு நீக்கப்படும்" மசோதாவையும் இந்த சிறப்பு நாடாளுமன்றக் கூட்டத்திலேயே கொண்டு வந்து நிறைவேற்ற வலியுறுத்துவோம்.

ஒன்றிய பா.ஜ.க. அரசால் சமீபத்தில் அறிவிக்கப்பட்ட "விஸ்வகர்மா யோஜானா" திட்டம், குலத் தொழிலை ஊக்குவிக்கும் வகையிலான நடைமுறைகளை வகுத்து, அதிலும் குறிப்பாக 18 வயது நிறைந்துள்ளவர்களை கல்லூரிக்கு செல்லவிடாமல், பரம்பரை தொழிலையே செய்யத் தூண்டும்குலத்தொழிலை மேலோங்கச் செய்யும் திட்டமிட்ட சூழ்ச்சி. இத்திட்டத்தையும் எதிர்த்து நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர்கள் குரலெழுப்புவார்கள்.

### 'இந்தியா' கூட்டணிக்கு அஞ்சி பெயர் மாற்றம்!

எங்கள் ஆட்சி காலத்தில் நாட்டையே மாற்றுவோம் என பேசி வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசு, தற்போது "இந்தியா" கூட்டணிக்கு அஞ்சி "பாரத்" என்று நாட்டின் பெயரை மாற்றுவதிலேயே உன்னிப்பாக இருக்கிறது.

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் முற்றிலும் தோல்வியுற்ற ஒன்றிய பா.ஜ.க. அரசை, நாடாளுமன்றத்தில் "இந்தியா" கூட்டணி கட்சிகளுடன் ஒருங்கிணைந்து எதிர்கொண்டு இந்திய ஜனநாயகத்தை காத்திட இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (16.9.2023) முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத் தலைவரும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் துணைத் தலைவருமான டாக்டர் அசோக் சிகாமணி மற்றும் தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் பொருளாளர் சீனிவாச ராஜ் ஆகியோர் சந்தித்து, இந்த ஆண்டு இந்தியாவில் நடைபெறவுள்ள உலகப் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான (ICC Men's Cricket World Cup India 2023) கோப்பையை காண்பித்து வாழ்த்துப் பெற்றார்கள். இதுதொடர்பாக முதலமைச்சர் அவர்கள் "INDIA will Win என்று வாழ்த்து தெரிவித்து டிவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

1000 பூங்கொத்துக்கள் மற்றும் 1000 கிலோ மலர்கள்!

## மகளிர் உரிமைத் தொகை திட்டத்திற்கு நன்றி தெரிவித்த 1000 மாணவிகள்!

### சென்னை எவர்வின் பள்ளியில் பிரமாண்டம்! அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்பு!

தமிழக அரசின் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தை பாராட்டும் விதமாக சென்னை கொளத்தூர் எவர்வின் வித்தியாஷ்ரம் பள்ளியில் நேற்று, சனிக்கிழமை, பிரமாண்ட நிகழ்ச்சி நடைபெற்றது. விழாவில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர் பாபு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இதில் 1000 உயர் வகுப்பு மாணவிகள் பங்கேற்றனர்.

பள்ளி மைதானத்தில் 10,000 சதுர அடி பரப்பில் ரோஜா மலர்கள் தூவப்பட்டிருந்தன. இதன் மையப் பகுதியில் 1000 மாணவிகள் கையில் பூங்கொத்துக்களுடன் 1000 என்ற எண்ணை வடிவமைத்து அமர்ந்திருந்தனர். இவர்கள் பூங்கொத்துக்களை பல்வேறு கோணங்களில் அசைத்தது கண்ணை கவரும் வகையில் இருந்தது. மேலும் "கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் முதல்வருக்கு நன்றி" என்ற வாசகங்களை 1000 கிலோ சாமந்தி மற்றும் ரோஜா மலர்களைக் கொண்டு வடிவமைத்திருந்தனர்.




இதுபற்றி 9ம் வகுப்பு மாணவி நந்தினி கூறுகையில் "இந்த திட்டம் மூலம் எனக்குத் தெரிந்த பல பெண்கள் பயனடைந்து உள்ளனர். அவர்கள் அளவற்ற மகிழ்ச்சியடைந்து தமிழக அரசையும் முதலமைச்ச ரையும் 'பாராட்டி வருகின்றனர். இதன் காரணமாகவே அந்த ஒரு கோடி பெண்களின் சார்பாக நாங்கள் இந்த பிரமாண்ட நிகழ்ச்சியை நடத்தியிருக்கிறோம்" என்றார்.

இதேபோல 8ம் வகுப்பைச் சேர்ந்த அ. சாம்பவி "இன்று தமிழ்நாடே மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி உள்ளது. இது பெண் உரிமையை நிலைநிறுத்துவதற்கும் அவர்களது சிறு சிறு செலவுகளுக்கு பிறரை சார்ந்திராமல் இருப்பதற்கும் பெரிதும் உதவும். இதனால் முதலமைச்சரை நேரில் சந்தித்து பாராட்ட விரும்புகிறோம்" என்று தன் ஆவலை வெளிப்படுத்தினார்.

நிகழ்ச்சியில் எவர்வின் பள்ளிக் குழும சி.இ.ஓ மகேஸ்வரி, மூத்த முதல்வர் புருஷோத்தமன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்!

## அயராது உழைத்திட்ட அனைவரையும் பாராட்டி மகிழ்கிறேன்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, செப். 18–

"கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தினை" மிகக்குறுகிய காலத்தில் செயல்படுத்திட உழைத்த அனைவரையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டியுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் அவர்கள் தமது முகநூலில் பதிவிட்டிருப்பதாவது:–

**கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் மிகக் குறுகிய காலத்தில் ஒரு கோடிக்கும் மேற்பட்ட பயனாளிகளைக் கண்டறிவதற்கு அயராது உழைத்திட்ட அனைவரையும் இத்தருணத்தில் பாராட்டி மகிழ்கிறேன்.**

**இத்திட்டத்தில் களப்பணியாற்றிய கிராம நிர்வாக அலுவலர்கள், வருவாய்த்துறை அலுவலர்கள், இல்லம் தேடிக் கல்வி திட்டத்தின் தன்னார்வலர்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள், நியாய விலைக் கடைப் பணியாளர்கள், நகராட்சி மாநகராட்சிப் பணியாளர்கள், தமிழ்நாடு மின் ஆளுமை நிறுவன பணியாளர்கள் மற்றும் அனைத்து அரசுத் துறை அலுவலர்களையும் இத்திட்ட நிகழ்வின் வெற்றியில் பாராட்டி மகிழ்கிறேன்!**

**களப்பணியாளர்களை வழிநடத்திய மாவட்ட ஆட்சியர்கள், அரசு செயலாளர்கள், தலைமைச் செயலாளர்கள் வரை உள்ள அனைத்து உயர் அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

# இரவிலும் தூங்காத சூரியனே வருக!- எங்கள் இதயத் துடிப்பாக இருப்பவனே வருக!



தங்கத் தமிழ்நாட்டைத்
தாங்கிப் பிடிக்கவே
தனிப்பிறவி எடுத்தாற்போல்,
தன்னை உருக்கித்
தலைப்பணிகள் செய்துவரும்
தங்கத் தளபதியே! எங்கள்
தலைமுறையின் அதிபதியே!

தகுதியே இல்லாத
தலையெல்லாம் மகுடங்கள்
தனக்குத்தான் என்று
தருக்கி அலைந்தாலும்,

தன்மானம் மிகுந்த
தன்தலையே மகுடமென்று
தரணிக்கே அறிவித்து
தமிழ்நாட்டை அதிர்வித்த
தண்டமிழ்ப் பாண்டியன்
கலைஞரின் திருவுருவே!
கண்ணியத்தின் மறுவுருவே!
கடமைக்குப் புதுவடிவே!

இணைவைக்க இன்னொருவர்
இல்லாமல், எப்போதும்
கணைவைத்துக் காத்திருக்கும்
கனல் போன்ற தூயவனே!

பாலாறும் மனம்படைத்த
பண்பாட்டுத் தலைவாஉன்னைப்
பாலாற்றங் கரையில்
பார்த்து மகிழ்வதற்கும்

நீயாற்றும் எழுச்சியுரை
நெஞ்சத்தில் சேர்ப்பதற்கும்
வாலாட்டும் பகைவென்று
வாகைப்பூ சூடுதற்கும்

கூடுகிறது வேலூரில்
கொம்பு சீவிப் புறப்பட்ட
கொள்கைப்போர்க் காளைகளின்
கூட்டம்…!

ஆட்டத்தின் நாயகனாய்
அகிலத்தின் கவனத்தை
ஈர்த்துப் பிடித்திருக்கும்
இனமானத் தளபதியே!

அண்ணாவைப் பெரியாரை
அணுவணுவாய் உள்வாங்கி
கண்ணாரப் பருகி
கருத்துகளில் உருகி
ஆழக் கடல்போல
அமைதியாய்த் தோன்றிய நீ..
இன்று
வேம்போல் பாய்ந்து
விளையாடு கின்றாயே!
உன்
வீர விளையாட்டை
வேலூரில் காண்பதற்கு
வீறுகொண்ட தமிழ்க் கூட்டம்
வெற்றிநடை போட்டு
விரைகிறது பாராய்!

புல்லாங்குழலின்
காயங்களில் இருந்து
புறப்படும்
புத்தின்பப் புதுப்பாட்டாய்
களங்கள் பலகண்ட
காயங்கள் மூலம்
காவியங்கள் தீட்டிவரும்
காலத்தின் கொடையேஎங்கள்
கனவுகளின் விடையே!

கண்ணசைவில் சேனைகளைக்
களமிறக்கும் வித்தைகளைக்
கலைஞரிடம் இருந்து
கசடறக் கற்றதனால்
களவெற்றி கொய்கின்ற
காலத்தில் எல்லாம்

மலர்கொய்தல் போல
மலைசாய்க்கக் கற்றவனே!
தலைகொய்யும் மனிதரையும்
தலைகவிழ வைப்பவனே!

மாநிலங்கள் அனைத்துக்கும்
மதிவழங்கும் கொற்றவனே!
மாதரெலாம் போற்றுமுயர்
மாண்புகளைப் பெற்றவனே!

அனைவரும் அர்ச்சகர்
ஆகலாம் என்னும்
அரிய சட்டத்தில்

'பெண்ணும் ஆகலாம்' என்று
கண்ணும் கருத்துமாய் நின்று
கருத்துரைத்து
இன்னும் கூடுதல்
ஏற்றத்தைப் பெற்றிருக்கும்
தென்னாட்டுப் புண்ணியனே!
திராவிடத்தின் திரவியமே!

உன்னை வரவேற்கும்
உற்சாக மாநாட்டில்
உன்
அன்னையாய் இருந்துநான்
அள்ளி அணைத்து
அன்புப்பால் ஊட்டும்
ஆவலில் மிதக்கின்றேன்!

அறிவாலய வீரனே!
அரசியல் புதுப்பித்த
அண்ணாவின் சீடனே!
கலைஞரெனும் வானத்தின்
கதிரவனே…நீ வருக!

வேலூர் என்பது
வீரத்தின் விளைநிலம்.
'இந்தியா'வின்
விடுதலைப் புரட்சிக்கே
வித்திட்ட விதைநிலம்!

பூமிப் பந்தின்
புத்திரர்கள் என்று
போற்றப் பட்டவர்களை
புரட்டிப் போட்ட
பூகம்பக் கோட்டை நகரம்!

இந்தியாவை வாழ்விக்க
'இந்தியா' முளைத்துள்ள
இந்த இனிய நேரத்தில்
வேலூர்க் கோட்டைநகரில்
உன்
வெற்றிப் பாதங்கள்
பதிகின்றன..தலைவா!

செயின்ட் ஜார்ஜ் கோட்டையின்
சிங்க நாயகன் நீ
செங்கோட்டைக்கு ஆகிவிட்டாய்
சிம்ம சொப்பனமாக என்று,
வரிச் சித்திரங்கள்
வரையப்படும் தருணத்தில்

வேலூர் மாநகரில்
உன் விழி அசைவுக்காய்க்
காத்திருக்கிறது
கழகம் என்னும்
கடல்!

வேலூரில் வெடித்த
வீரக் களப்போரில்
விடுதலை வானத்தின்
விடியல் கீற்று
வெளிப்பட்டாற் போல
இந்தியாவுக்கு
இன்னொரு விடுதலை
வாங்கித் தரப்போகும்
வைரநெஞ்சத் தலைவா!
உன்னை
வரவேற்கிறது
வேலூர் மாவட்டம்!

கருத்தியல் புரட்சியின்
கனமான விளைவுகளைக்
கண்முன்னே கண்டு
களிப்புற்ற பெரியாரும்

காகிதங்களை ஆயுதமாக்கி
காயங்களைக் கவசமாக்கி
களங்களை மேடையாக்கி
காற்றைவிட வேகத்தில்
வெற்றிகளைக் கூட்டி
வீற்றிருந்த அண்ணாவும்

உதிர்ந்து விழுந்தாலும்
ஒவ்வொரு முறையும்
காம்பிலேபோய் ஒட்டிக் கொள்ளும்
உலக அதிசய
உழைப்புப் பூவாகி…

'உதய சூரியன் ஒருபோதும்
உதிராது' என்று
உலகக் கண்களுக்கும்
உள்ளூர்க் காதுகளுக்கும்
உரக்கச் சேதி சொன்ன
உயிரனைய தலைவர் கலைஞரும்

பின்னிப் பிணைந்து
பிழையறக் கலந்து
நீரில் புகுந்த
நீராய் இணைந்து
பாரில் உலாவும்
பைந்தமிழ்த் தலைவன்
இவன் என்று
பரபரப்போடு
பார்க்கப் படுகிறாய் நீ!

திராவிடம் என்கிற
தெளிந்த சிந்தனையைத்
திக்கெலாம் அள்ளித்
தெளிக்கிறாய் நீ!

அடைத்துக் கிடந்த
அறிவுணர்ச்சி வாசல்களை
ஆயிரம் யானை பலங்கொண்டு
அலட்சியமாய்த் திறக்கிறாய் நீ!

பெரியார் நெஞ்சின்
பெருமுள் எடுத்து
எக்காலத்தும் திறக்காத
இரும்புக் கதவுகளை
எக்காளம் இட்டு
உடைக்கிறாய் நீ!

கட்டுக் குலையாமல்
காப்பாற்றப்பட்ட
சனாதனச் சழக்குகளை
அழுக்கு வெளுப்பதுபோல்
அடித்துத் துவைக்கிறாய் நீ!

அதனால்..சில
'கர்மயோகிகளின்'(!)
கழுகுக் கண்களால்
கவனிக்கப் படுகிறாய் நீ!

'புழுதிப் புயலுக்குத்
தலைவணங்காது
பொதிய மலை' என்பதுசில
புண்ணாக்கு மலைகளுக்குத்
தெரியாது!

ஈரோட்டுக் கிழவனுக்கும்
எழிற்காஞ்சித் தலைவனுக்கும்
வாஞ்சையுடன் நாட்டை
வழிநெடுத்த கலைஞருக்கும்
பொற்கால ஆட்சியில்
புகழ் வளர்த்து
நிகழ்காலத்தின்
நிறமாலையாய்த் திகழும்
நேரிய தலைவாஎங்கள்
சூரியத் தலைவா!

கவலைப் படாதே!
காலத்தால் நீ
கவனிக்கப் படுகிறாய்!
ஞாலத்தின் ஞானத்தால் நீ
அளக்கப் படுகிறாய்!

சிதறாத சீலத்தால் நீ
நோக்கப் படுகிறாய்!
அறம்சார்ந்த
ஆன்மிக உலகத்தாலும் நீ
அவதானிக்கப் படுகிறாய்!

அணுசக்தியை விடவும்
ஆற்றல் வாய்ந்த ஜனசக்தி

உன்
பின்னாலும் இருக்கிறது
முன்னாலும் இருக்கிறது!

உன்னை
அசைக்கத் துடிக்கும்
அத்தனை பேருக்கும்
அரசியல் அனுபவத்தோடு
அடியேன் சொல்கிறேன்!

அசைக்கப் படுவதற்கு நீ
அருகம்புல் அல்ல
ஆல விருட்சம்!

பல கோடி விழுதுகள்
பற்றிப் படர்ந்திருக்க
ஆகாயம் அளவுக்கு
அடர்ந்து நிற்கும்
அதிசயமான
ஆல விருட்சம் நீ!

உன் விழுதுகள் ஒருபோதும்
பழுதுகள் ஆகாது என்று
'பாரதத்திற்கு'ப்
பாடம் எடுக்கப்போகும்
மங்கல மாநாடு இது!

கிழக்கு வானத்தைக் கிழித்து
விடியலை எடுத்து
விழிகளுக்குக் கொடுத்த
வித்தகத் தலைவர்கள்
பெரியாரும் அண்ணாவும்
பெரும்புகழ்க் கலைஞரும்
இல்லையென்றாலும்
இருக்கின்றாய் நீயென்றே
இருக்கின்றார்கள்
எட்டுக் கோடி மக்கள்!

நல்லவர்களுக்கு
நடையில் நின்றுயர்
நாயகனாய் விளங்கும் நீ
பொல்லாதவர்களுக்குப்
புது நெருப்பாய்த் தோன்றுகிறாய்!

என்ன செய்வது
குன்றுபோல் குவிந்து கிடக்கும்
குப்பைகளை எரிக்கும்
கொள்கைத் தீ
சித்தரஞ்சன் சாலையில் தானே
நீறுபூத்துப் போகாமல்
நீல நாக்கோடு நிற்கிறது!

கொள்கையில் சமரசம்
குன்றிமணி அளவும்
கூடாது என்று,
நிமிர்ந்து எரியும்
நெருப்புக்குத் தெரியும்!

குப்பைகளை எரிப்பதுதான்
அதன் வேலை!
எதிர்ப்பது அல்ல என்று
எவரும் சொல்லிக் கொடுக்க
வேண்டியதில்லை
நெருப்புக்கு!

நீ
அடுப்புக்கு நெருப்பாய் இருந்து
பசி நெருப்பை அணைப்பாய்
வள்ளலாரைப் போல!

ஆதிக்கக் குப்பைகள்
சாதிக்க நினைத்தால்
சாம்பலாய் ஆக்குவாய்
ஊழித்தீ போல!

நீ
பெரியார் அண்ணா
பீடுமிகு கலைஞர் என்னும்
மூவரால் ஆன
முத்தமிழ்க் கலவை!

அதனால்தான்
ஒன்று விடாமல்
நிறைவேற்றுகிறாய்
அவர்கள் கனவை!

மழலையர் தமக்கு
மாதாவாய் இருந்து
ஊட்டுகிறாய் காலை
உணவை!

மாதாக்கள் நெஞ்சம்
மகிழ்விக்க வேண்டி

உரிமைத்தொகை தந்து
உவமை சொல்ல முடியாமல்
காட்டுகிறாய்
உன் உணர்வை!

வா.. தலைவா! வா..!
வாகைப்பூ சூடவே
வந்து பிறந்திட்ட
வசந்தத் தலைவனே.. வா!

வாட்டம் தீர்ப்பதற்கு
வாடாமல் உழைக்கின்ற
நாட்டம் மிகுந்தவனேஎங்கள்
நாடி நரம்புகளில்
கூட்டம் போட்டுக்
குருதிக்குச் சூடுதந்து
ஈட்டிவா வெற்றியென்று
ஈட்டிகளாய் இலட்சியத்தைக்
கூட்டிவைத்த கலைஞரெனும்
கோட்டைக்கு வேந்தனே!
கோட்டை நகரத்தின்
கூட்டத்தைக் காணவா!

எங்கள்
மனதில் விளையாடி
மகிழ்வில் உறவாடி
படையில் களமாடிப்
பாராளும் மன்னவனே!

பாசப் பாலாறு
பாய்ந்து வருமாறு
புதிய வரலாறு
பூக்க அழைக்கின்றேன்!

எப்பெரும் விழாவுக்கும்
இல்லாத சிறப்பு
இப்பெரும் விழாவாம்நம்
முப்பெரும் விழாவுக்கு
எப்போதும் உண்டு!

வா..தலைவா! வா!
புதிய வானத்தின்
புன்னகை வாசலை
நிலவுபோல் திறக்க
நீ… வா!

வரலாற்றுப் பொன்னேட்டில்
வாசனைத் தலைமாய்
மணக்கின்ற எங்கள்
மக்களின் தலைவா!

டாக்டர்
எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி.
மேனாள் ஒன்றிய இணை அமைச்சர்



சிறுமையைக் கண்டால்
மட்டுமே
சினக்கின்ற தலைவா!
சிந்தனையால் மட்டுமே
கனக்கின்ற தலைவா!

சின்னஞ் சிறுவர்களும்
உசுக்கின்ற தலைவா!
தேசத் தலைவர்களே
திகைக்கின்ற தலைவா!

திசையளக்கும் பகலவனாய்த்
தெறிக்கின்ற தலைவா…
தேமதுரத் தமிழ்நாட்டைத்
தீட்டுகின்ற தலைவா….

பெரும்படை காணவே
பிரியமுடன் வருந்தலைவா!
நாளைய உலகுக்கு
நம்பிக்கை தருந்தலைவா!
புதிய இந்தியாவைப்
படைப்பிக்கும் பெருந்தலைவா!

வானத்து மீன்களை
வரவழைத்தாற் போல
வந்து குவிந்திருக்கும்
மக்கள் வெள்ளத்தில்
நீ
நீந்தவா தலைவா!

எங்கள்
வாழ்த்துப் பூக்களை
உன்
இதயக் கரத்தில்
ஏந்தவா தலைவா!

## சுயமரியாதைத் திருமணத்தை சட்டமாக்கிய அண்ணா!

# அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்கி பெரியார் சமத்துவபுரம் கண்ட கலைஞர்!

## தந்தை பெரியார் பிறந்த செப்.17 யை 'சமூக நீதி நாள்' என அறிவித்த முதல்வர் மு.க.ஸ்டாலின்!

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் தமிழ் இனத்துக்கும், தமிழ் நாட்டிற்கும், தமிழ் மக்களுக் கும் மட்டுமல்லாமல் மனித குலத்திற்கே பகுத்தறி வைப் போதித்த பெருமகன்.

சுயமரியாதை கருத்தை முன்னெடுத்து தந்தை பெரியார் அவர்கள் களம் காணாவிடில் இன்று நம் நிலைமையை நினைத்து பார்க்கவே முடியாது!

தந்தை பெரியார் அவர்களின் கனவுகளை செயல்வடிவம் கொடுத்து சட்டமாக்கி அவரது கன வுகளை செயல்படுத்தி வருபவர்கள் திராவிட இயக்க வழித்தோன்றல்கள்.

தி.மு.கழக அரசு தமிழ்நாட்டில் ஆட்சி பொறுப் பில் அமைந்ததும், தந்தை பெரியாரின் போராட் டங்கள் வீண் போகவில்லை!

ஒவ்வொரு திட்டமும் அடித்தட்டு மக்களின் முன்னேற்றத்திற்காகவே செயல்படுத்தப்பட்டன!

தற்போதும் கழக ஆட்சியில் செயல்படுத்தப்பட் டும் வருகின்றன!

தந்தை பெரியார் அவர்களின் கனவுத் திட்டங் களை செயல்படுத்திய

பேரறிஞர் அண்ணா,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திட்டங்கள்!

திராவிட இயக்க வழித் தோன்றலான நமது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் தந்தை பெரியார் அவர்களின் கனவுத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

**சுயமரியாதைத் திருமணங்கள்!**

பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் 1967 ஆம் ஆண்டு முதன் முதலாக தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சி மலர்ந்ததும், அண்ணா அவர்கள், சுயமரியாதைத் திருமணம் சீர்திருத்த திரும ணங்கள் சட்டம் கொண்டு வந்து அதற்கான அங் கீகாரத்தினை அளித்து இந்த சுயமரியாதைத் திரு மணச் சட்டத்தை தந்தை பெரியார் அவர்களுக்கு காணிக்கையாக்குகிறேன் என்று அறிவித்தார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஐந்து முறை முதலமைச்சராகப் பொறுப்பேற்று தந்தை பெரியார் அவர்களின் கனவுத் திட்டங்களுக்கு செயல்வடிவம் கொடுத்தார்.

செங்கல்பட்டு மாநாட்டில்1929 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 29 ஆம் தேதி அன்று கொண்டு வந்த தீர்மானம் தான் பெண்களுக்கு சொத்தில் சம உரிமை அளிக்கும் திட்டம்,

இத் திட்டம் தந்தை பெரியார் அவர்களின் கன வுத் திட்டம்!

இத் திட்டத்தினை நனவாக்கும் வகையில் அதாவது 60 ஆண்டுகள் கழித்து, அதாவது 1989 ஆம் ஆண்டு மூன்றாம் முறையாக முதல்வராக கலைஞர் அவர்கள் பொறுப்பு வகித்த போது, பெண்களுக்கு சொத்தில் சம உரிமை அளிக்கும் வகையில் சட்டத்தினை இயற்றினார்.

தந்தை பெரியார் அவர்களின் நீண்ட கால கனவு அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆக லாம் என்பது!

அக் கனவினை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1970 ஆம் ஆண்டு அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக லாம் என்ற சட்டத்தினை கொண்டுவந் தார்.

இந்த சட்டத்திருத்தத்திற்கு பல்வேறு எதிர்ப்புக் கிளம்பி நீதிமன்றங்களுக்கு வழக்குகள் சென்றாலும் அனைத்திலும் வெற்றி பெற்று அனைத்துச் சாதியின ரும் அர்ச்சகராக்கும் உரிமையை பெற் றுத் தந்து, தந்தை பெரியார் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்றியவர் கலை ஞர்!

இதற்காக 2006 ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் ஐந்தாம் முறையாக முதல்வராகப் பொறுப்பேற்றதும் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக லம் என்ற சட்டத்திற்கு 29.8.2006 அன்று ஆளு நரிடம் ஒப்புதல் பெறப்பட்டது.

அதே ஆண்டு கலைஞர் அரசால் நியமிக்கப் பட்ட ஏ.கே. ராஜன் குழு வின் பரிந்துரையின் படி அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகள் திறக்கப்பட்டன.

இதில் 249 மாணவர்கள் பயிற்சியில் சேர்ந்த னர். இந்த பயிற்சி மூலம் 207 பேர் பயிற்சியை முழுமையாக முடித்தனர்.

**தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரம்**

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம்




என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க சட்டத்தை கொண்டு வந்து நிறைவேற்றிய கலைஞர் அவர் கள், அனைத்துச் சாதியினரும், அனைத்து மதத் தினரும் ஒன்றாக வசிக்கும் வகையில் உருவாக் கப்பட்டது தான் தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரம்!

இந்த தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரம் 17.8.1998 அன்று மதுரை மாவட்டம், திருமங் கலம் அருகே மேலக்கோட்டையில் அப்போது முதல்வராக இருந்த கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

கலைஞர் ஆட்சியின் போது 100 வது சமத்துவ புரத்தை திருச்சி மாவட்டம் மல்லிகைப்பட்டியில் அப்போது துணை முதல்வராக இருந்த மு.க. ஸ்டாலின் அவர்கள் 12.6.2009 அன்று திறந்து வைத்தார்.

இந்த திறப்பு விழாவில் சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து கலைஞர் அவர்கள் காணொலியில் உரை யாற்றுகையில்,

**தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்றார் நமது தேசத்தந்தை அண்ணல் காந்தி அடிகள்!**

**சாதி வித்தியாசம் என் பது கற்பிக்கப்பட்டதே ஒழிய வேறில்லை. வலுத் தவன் இளைத்தவனை அடக்கி வைப்பது என்பதற்கு சாட்சி சாதி வித்தி யாசமே ஆகும். இது இன்னும் நிலைத்திருப்பது என் றால் இந்த நாடு மிருகப்பிரா யத்திலிருந்து மனிதப் பிராயத்திற்கு இன்னமும் வரவில்லை என்பதைத் தான் இது தெளிவாகக் காட்டுகிறது. என்று கூறி சாதி ஒழிந்த சமுதாயத்தை நான் உள்ளபோதே காண விழைகிறேன் என்றார் தந்தை பெரியார்.**

**தோழமைதான் சமத்துவத்தின் கனி, சமதர்மம் மணம், அதைக் காண வேண்டுமானால் சாதி தொலைய வேண்டும் என்றார் பேரறிஞர் அண்ணா,**

**அண்ணல் அம்பேத்கர் சாதி, மத பேதங்கள் இந்த மண்ணிலிருந்து அகற்றப்பட வேண்டும் என் பதற்காக வாழ்நாள் முழுவதும் போராடினார்.**




பெண்களும் ஓதுவார்களாக நியமனம்!

**இந்த நிலையில் சாதி வேறுபாடுகளை முற்றிலும் மறந்து தமிழ் சமுதாயம் ஒரே சமுதாயமாக வாழ வேண்டும் என்கிற குரல், மெல்ல, மெல்ல, ஆனால், உறுதியாக வெற்றி பெற வேண்டும் என்பதற்காக கழக அரசால் உருவாக்கப்பட்ட ஒரு திட்டம்தான் தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம்.**

**1997 ஆம் ஆண்டில் நமது இந்திய திருநாட்டின் சுதந்திரப் பொன்விழா கொண்டாடப்பட்டபொழுது, ஆதி திராவிட மக்கள் உள்பட அனைத்துச் சமூகத்தி னரும் நல்லிணக்கத்தோடு சமத்துவமாக ஒரே குடி யிருப்பில் அருகருகே ஒற்றுமை யாக வாழும் வகையில் தலா 100 வீடுகளைக் கொண்ட சமத்துவபுரங் கள் தமிழகம் முழுவதும் அமைக் கப்படும் என முதலமைச்சர் என்ற முறையில் இந்தியாவிலேயே முதன் முதலாக என்னால் அறிவிக்கப் பட்டது.**

**அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து தமிழகத்தில் அமைக்கப்பட்ட முதல் பெரியார் நினைவு சமத்துவபுரத்தை மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே மேலக்கோட்டையில் 17.8.1998 அன்று நான் திறந்து வைத்தேன். அப்படி திறந்து வைத்தஅந்த விழாவில் பல்வேறு பிரிவு மக்களையெல்லாம் ஒன்றாக்கு கின்ற சமத்துவம் முகிழ்க்க வேண்டும் என்பதற்காக இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. என் பதை எண்ணிப்பார்த்து இதைப் பயன்படுத்துகின்ற வர்கள் நல்ல தூய்மையை இங்கே வளர்க்கவும், அறிவினை இங்கே வளர்க்கவும் நல்ல பிள்ளை களை வளர்த்து உருவாக்கவும் எங்களோடு இந்த அரசோடு ஒத்துழைக்க வேண்டும் என்று அனைவ ரையும் கேட்டுக் கொள்கிறேன்.**

என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அன்று பேசினார்.

இந்தச் சமத்துவ புரங்கள் தமிழ்நாட்டில் 240



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் ஆகியோர் (1.4.2023) கேரள மாநிலம், கோட்டயம் மாவட்டம், வைக்கத்தில் உள்ள தந்தை பெரியார் நினைவிடத்தில் அவரது திருவுருவச் சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள். உடன் கேரள மாநில அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு ஆகியோர் உள்ளனர்.

இடங்களில் அமைக்கப்படும் என்று கலைஞர் அவர்கள் திட்டமிட்டு சமத்துவபுரங்களை அமைத் தார்.

அது மட்டுமல்லாமல் 1989 ஆம்ஆண்டு பெரி யார் ஈ.வி.ஆர்.நாகம்மை இலவசக் கல்வித் திட் டத்தை கலைஞர் அவர்கள் அறிமுகப்படுத்தினார்.

ஈ.வி.ஆர்.மணியம்மையார் நினைவு ஏழை பெண் திருமண உதவித் திட்டம் என்று ஏழை பெண் குழந்தைகளின் திருமணத்திற்காக ரூபாய் 10,000 ஆளிக்கும் வகையில் திருமண நிதி உத வித்திட்டத்தை அறிமுகப்படுத்தினார். இன்றைக்கு இந்த பெண்களுக்கான திருண நிதி உதவித் திட் டம் தான் பல்வேறு வகையில் பரிணாமித்து இருக்கிறது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

தந்தை பெரியார் அவர்களின் சொந்த ஊரான ஈரோட்டினை மாநகராட்சியாக மாற்றிய பெருமை யும் கலைஞர் அவர்க ளுக்கே உண்டு. இப் படி முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்கள், தந்தை பெரியார் அவர்களின் எண் ணங்களுக்கு செயல் வடிவம் கொடுத்தார்.

**தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் புதுப்பிப்பு!**

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலை ஞர் வழியில் திராவிட இயக்க வழித்தோன்றலான கழகத் தலை வர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர் கள் 2021 மே 7 ஆம் தேதி முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்!

கடந்த காலஅ.தி.மு.க. ஆட்சியில் தந்தை பெரி யார் நினைவு சமத்துவபுரத்தினை புறக்கணிக்கும் வகையில், சமத்துவபுரங்கள் பராமரிப்பின்றி வசதிகள் இன்றி, மக்கள் வாழத் தகுதியற்றதாக மாற்றிட வழி வகுத்தனர். அச் சமத்துவபுரங் களுக்கு அடிப்படை வசதிகள் எதனையும் அ.தி.மு.க. ஆட்சியினர் செய்யவில்லை,

இதனை அறிந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீண்டும் சமத்துவ புரங்கள் புதுப்பிக் கப்படும் என்று சட்டப்பேரவையில்அறிவித்தார். அந்த அறிவிப்பில்

ஏற்றத்தாழ்வை இடித்து, சமூகத்தை சமப்ப டுத்த போராடிய தந்தை பெரியார் பெயரால் 240 சமத்துவ புரங்கள் கட்டினார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் . அந்த சமத்துவபுரங்கள் சரி யாக பராமரிக்கப்படாத அவல நிலையில் இப் போது இருக்கின்றன. அந்த சமத்துவபுரங்கள் உடனடியாக சீரமைக்கப்படும். அதுமட்டுமல்ல தமிழகத்தில் மேலும் புதிய சமத்துவபுரங்கள் அமைக்கப்படும் என்றும்அறிவித்தார்.

அறிவித்ததோடு நின்று விடாமல் சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரியில் 100 வீடுகள், பூங்கா, நூலகம் குழந்தைகள் காப்பகம் உள்ளிட்ட வசதி களுடன் கூடிய புதிதாக புதுப்பிக்கப்பட்ட சமத்துவ புரத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். இதே போன்று முதல்வர் அவர் கள் 240 சமத்துவபுரங்களையும் புதுப்பித்து நவீ னப்படுத்திக் கொண்டு வருகிறார் தந்தை பெரியார் நினைவு சமத்துவ புரங்கள் மூலம் சதி, மதங்க ளற்ற ஒன்று பட்ட சமுதாய மக்களை ஒரே இடத் தில் அமர்த்தும் பணியில் முனைப்புடன் செயல் பட்டுக் கொண்டிருக்கிறார் முதல்வர்!

தந்தை பெரியார் நெஞ்சில் தைத்த முள்ளை கலைஞர் அகற்றினார் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் சட்டம் கொண்டு!

இது தந்தை பெரியார் கனவு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முன்னின்று செயல்படுத்திய திட்டம் இவ்விருவரின் கனவை நனவாக்கும் வகையில், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்பதை கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிறைவேற்றி காட்டி விட்டார்.

ஆம், 14.8.2021 அன்று சென்னை கபாலீசு வர் கற்பகம்பாள் திருமணமண்டபத்தில் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் திருக்கோ யில்களில் பணிபுரிவதற்காக அனைத்துச் சாதி யினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற அரசாணை யின் கீழ் 24 பயிற்சி பெற்ற அர்ச்கர்களுக்கு திருக்கோயில்களில் பணிபுரிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பணி ஆணைகளை வழங்கி வாழ்த்தினார்.

அதே போன்று கோவில் கருவறைக்குள்ளும் பெண்கள் போகும் வகையில் முதல்வர் அவர்கள் முன்னெடுப்பை எடுத்துள்ளார். 29 ஓதுவார் களுக்கு பணி நியமன ஆணைகளையும் வழங்கினார்.

இந்தப் பணி ஆணை பெற்றவர்களின் பட்டி யல் பிரிவில் 5 பேர், மிகவும் பிற்படுத்தப்பட்டோரி ல் 6பேர், பிற்படுத்தப்பட்டோரில் 12 பேர், பொதுப் பிரிவைச் சேர்ந்தவர் ஒருவர் இடம் பெற்றது மட் டுமின்றி வரலாற்றில் பதிவு செய்யத் தக்கவையில் பெண் ஓதுவார்களுக்கும் பணி நியமனை ஆணையை வழங்கினார் முதல்வர்.

நாட்டிலேயே பெண்கள் ஓதுவராக நியமிக்கப் பட்டது இதுவே முதல் முறையாகும். அந்த வகை யில் ஒட்டுமொத்த இந்தியாவிற்கும் தான்தான் வழிகாட்டு என்பதை முதல்வர் அவர்கள் நிரு பித்து காட்டியிருக்கிறார்.

பெண் ஓதுவார்களில் காஞ்சனா என்ற பெண் ஓதுவார் ஒருவருக்கு தாம்பரம் அருகே மாடம்பாக் கத்தில் உள்ள இந்து சமய அறநிலையத் துறை கோயிலில் ஓதுவராக நியமனம் செய்யப்பட்ட பணி ஆணையை முதல்வர் தனது திருகரத்தால் வழங்கினார்.

இவை எல்லாம் தந்தை பெரியார் கனவு இன் றைக்கு திராவிட இயக்க வழித்தோன்றல்கள் மூலம் நிறைவேற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

சமூக சமதர்ம கோட்பாடுகள் இன்று அனைத்து மக்களுக்கும் கிடைத்துக் கொண்டிருக்கின்றன.

**தந்தை பெரியார் பிறந்த நாள் சமூக நீதி நாள்!**

தந்தை எவ்வழியோ தனயனும் அவ் வழியே என்பதற்கேற்ப, தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் வழியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் அடியொற்றி செயல்படுகிறார்.

தமிழக மக்கள் எவராலும் மறக்க முடியாத மனிதர் தந்தை பெரியார்.

அப்படிப்பட்ட மாமனிதர் தந்தை பெரியார் அவர்களுக்கு மேலும் புகழ் சேர்க்கும் வகையில், தந்தை பெரியார் பிறந்த நாளான செப்டம்பர் 17 சமூக நீதி நாளாக கொண்டாடப்படும் என்று சட்டப் பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

**அந்த அறிவிப்பில்,**

**...அறிவாசான் தந்தை பெரியார் பிறந்த செப்டம்பர் 17 ஆம் நாளை ஆண்டுதோறும் 'சமூக நீதி நாள்' ஆகக் கொண்டாடுவது என்று தமிர்நாடு அரசு முடிவெடுத்துள்ளது.**

**தந்தை பெரியாரின் அறிவு வெளிச்சத்தில் வளர்ந்த நாம் நமது நன்றியின் அடையாள மாக இந்த நாளைக் கொண்டாடுவோம், சாதிய ஏற்றத்தாழ்வுகள், தீண்டாமைக் கொடு மைகளை, மத வேறுபாடுகளை உதறித் தள்ளு வோம், பெண்களைச் சமநிலையில் மதிப் போம், அந்த எண்ணத்தை விதைக்கும் விதமாக இந்த உறுதிமொழியைத் தயாரித் துள்ளோம். ஆண்டுதோறும் செப்டம்பர் 17 ஆம் நாளன்று தலைமைச் செயலகம் தொடங்கி, அனைத்து அரசு அலுவலகங்களிலும் கீழ்க் கண்ட உறுதிமொழியை அனைவரும் எடுத்துக் கொள்வோம்.**

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற அன்பு நெறியும்,**

**யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பண்பு நெறியும்,**

**எனது வாழ்வியல் வழிமுறையாகக் கடை பிடிப்பேன்!**

**சுயமரியாதை ஆளுமைத் திறனும் பகுத்த றிவுக் கூர்மைப் பார்வையும் கொண்டதாக என்னுடைய செயல்படுகள் அமையும்**

**சமத்துவம், சகோதரத்துவம், சமதர்மம் ஆகிய கொள்கைகளுக்காக என்னை நான் ஒப்படைத்துக் கொள்வேன்.**

**மானுடப் பற்றும் மனிதாபிமானமும் ஒன்றே எனது இரத்த ஓட்டமாக அமையும்**

**சமூக நீதியையே அடித்தளமாகக் கொண்ட சமுதாயம் அமைக்கும் எனது பயணம் தொடர இந்த நாளில் உறுதியேற்கிறேன்"**

**என்ற உறுதி மொழியையும் வடித்தெடுத்தெ டுத்துக் கொடுத்துள்ளார் முதல்வர்!**


**வைக்கம் போராட்டம்**

**தந்தை பெரியார் முன்னெடுத்த போராட்டங் களில் மிக முக்கியமானது வைக்கம் போராட் டம் ஆகும். 'வைக்கம் வீரர்' என்றே பெரியார் அவர்கள் அழைக்கப்பட்டார்.**

**இந்த வைக்கம் போராட்டம் நூற்றாண்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்த விழா வில் திராவிட இயக்கத்தின் வழித்தோன்றல் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு வைக்கம் போரட்ட நினைவுத் தூணுக்கும் அங்குள்ள தந்தை பெரி யார் திருவுருவச் சிலைக்கும் மரியாதை செலுத்தினார்.**

கழகத் தலைவர் - முதல்வர் அவர்களின் இந்த சூளுரையை நாம் நெஞ்சில் ஏந்தி, ஒற்றுமையு டன் நாம் அனைவரும் ஒன்றிணைந்து, மதவாத சக்திகள் மீண்டும் கோலோச்ச நினைப்பதை முறி யடிக்க தந்தை பெரியார் பிறந்த இந்நாளில் உறுதியேற்போம்!

# வகுப்புரிமை!



ஒரு தாய் வயிற்றில் பிறந்த எல்லா மக்களுக்கும் சம அனுப வம் இருக்க வேண்டும் என்று கருதி, ஒன்றாக கொன்று குறைவு, அதிகம் இல்லாமல் பார்த்துக் கொள்வது எப்படி ஒரு தாய்க்கு இயற்கைக் குணமாக இருக்குமோ, அது போலத்தான் எனக்கும் தோன்றுகிறது. மற்றும் அந்தத் தாய் தனது மக்களில் - உடல் நிலையில் இளைத்துப்போய், வலிவுக் குறைவாய் இருக்கிற மகனுக்கு, மற்ற குழந்தை களுக்கு அளிக்கிற போஜனையை விட எப்படி அதிகமான போஜனையைக் கொடுத்து மற்ற குழந்தைகளோடு சரிசமானமுள்ள குழந்தையாக ஆக்க வேண்டுமென்று பாடுபடு வாளோ, அது போலத்தான் நான் வலுக் குறைவான பின் தங்கிய மக்களிடம் அனுதாபம் காட்டுகிறேன்.

இந்த அளவுதான் நான் பார்ப்பனரிடமும்,மற்ற வகுப்புகளிடமும் காட்டிக் கொள்ளும் உணர்ச்சியும் ஆகும்.

**-தந்தை பெரியார்**

# வருணாசிரமம்!




வருணாசிரம தர்மத்தின் மூலமாகத்தான் நமது நாட்டில், தீண்டாமைக் கொள்கை அமலில் இருந்து வருகிறதே யொழிய,வருணாசிரமம் இல்லாவிட் டால், தீண்டாமைக் கொள்கை பரவ மார்க்கமே கிடையாது.வருணாசிரமத் தர்மம் என்கிற ஓர் உடல் இல்லாவிட்டால்,தீண்டாமை என்கிற உயிருக்கு ஆட்டம் இல்லை.

வருணாசிரமத்தின் கருத்து என்ன ? ஒருவன் மேல் சாதி, ஒருவன் கீழ்ச் சாதி; ஒருவன் பாடுபடுவதற்காக இருக்க வேண்டியவன்; ஒருவன் அந்த உழைப்பை அனு பவிக்க வேண்டியவன்; இதைத் தவிர வருணத்தின் தத்துவம் என்ன?

**-தந்தை பெரியார்**

# எதிர்பார்ப்பு!



நான் ஒரு பகுத்தறிவுவாதி.நான் பகுத்தறிவு வாதி என்பது மட்டுமல்லாமல், நாட்டு மக்களிடையே நிலவி வரும் மூட நம்பிக்கைகள் ஒழிய வேண்டும் என்கிற சீர்திருத்த வாதி. ஆனதால் எனக்கு மதம் - கடவுள் - புராணப் பற்றோடு, நாட்டுப் பற்று, மொழிப் பற்று, இலக்கண இலக்கியப் பற்று கிடையாது.

மனிதப் பற்று, சமுதாயப் பற்று ஒன்றுதான் எனக்கு உண்டு.அந்தச் சமுதாய இழிவு ஒழியவும், மானமற்ற இழிநிலை போகவுமே நான் தொண்டாற்றி வருகிறேன். இதன் மூலம் நான் எதிர்பார்ப்பதெல்லாம், நம் சமுதாய மக்கள் மற்ற உலக மக்களைப்போல, இழிவற்று,மானத்தோடு, அறிவோடு நல்வாழ்வு வாழ வேண்டும் என்பதுதான் !

**-தந்தை பெரியார்**

# மக்களுக்காக போராட்டம் நடத்திய பெரியார்!

## பேரறிஞர் அண்ணா!



சமூக நீதியற்ற தன்மைகளுக்கும் கொடுமைகளுக்கும் உள்ளாக்கப்பட்ட மக்களுக்காகத் தமிழ்நாட்டில் போராட்டத்தை நடத்தியவர் பெரியார் (ராமசாமி) அவர்களே. அதேபோன்று தெனாலியில் முதலில் குரல் எழுப்பியவர் ராமசாமி சவுதரி என்பவர் ஆவார். இந்த இருபெரும் சமூக சீர்திருத்தத் தலைவர்களுக்கும் ஒரே பெயர் பொருந்தியிருப்பது வியப்புக்குரியதாக இருக்கிறது. கடவுளின் அவதாரமென்று கூறப்படுகிற ராமசாமி யையும் அதையொட்டிய கருத்துக்களையும் நிறுவனங்களையும் எதிர்த்து ராமசாமி என்ற பெயருள்ள இரு பெரியார்களும் கண்டனமாரிகளைப் பொழியும் பிரச்சாரங்களைச் செய்யும் தகுதி பெற்றவர்களாகியுள்ளனர்.

தமிழ்நாட்டில் நாங்கள் இந்தப் பிடிவாத மான மக்களை எங்களுடைய கருத்துக்களுக்கு ஏற்ப வளைத்துக் கொண்டு வருவதற்கு இருபதாண்டுக் காலமாக விவாதித்து வந்திருக்கிறோம்; இறுதியாக நாங்கள் வெற்றி பெற்றோம். பூமியில் உள்ள தீமையை ஒழிக்கக் கடவுள் 10 அவதாரங்களுக்குக் குறையாமல் எடுத்ததாகக் கூறப்படுகிறது. ஆனாலும் தீமைகள் முழுவதும் ஒழிந்தபாடில்லையே! மனிதர்களாகிய நமக்குத்தான் தீமைகளுக்கு எதிராகப் போரிட்டு. அதை வேரோடு ஒழித்துக்கட்டும் மிக உயர்ந்த கடமை ஏற்பட்டிருக்கிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு, சுயமரியாதைக் காரர்களாகிய எங்களில் சிலர் சுயமரியாதைத் திருமணம் என்ற சீர்திருத்தத் திருமணங்களை நடத்த, போலீஸ் உதவியை நாட வேண்டியதாய் இருந்தது. அந்தத் திருமணங்கள் குருக்கள் இல்லாமலும். மந்திரங்கள் சொல்லப்படாமலும், ஓமத் தீ இல்லாமலும் நடத்தப்படும் திருமணங்கள் ஆகும்.

ஒரு கிராமத்தில் பெரியார் (ராமசாமி) அவர்களும் நானும் ஒரு சுயமரியாதைத் திருமணத்தை நடத்தி வைக்கச் சென்ற போது, போலீஸ் அதிகாரி ஒருவர் எங்களைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு வரும்படிச் சொல்லி அனுப்பினார் நாங்கள் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றபோது. எங்களைக் கைதுசெய்யவோ. காவலில் வைக்கவோ அழைக்கவில்லை யென்றும். சனாதனிகளால் தொல்லை நேராது எங்களைப் பாதுகாக்கவே அழைத்ததாகவும் அந்தப் போலீஸ் அதிகாரி கூறினார் ஆனால் இன்றோ தமிழ்நாடெங்கும் அத்தகைய சுயமரியாதைத் திருமணங்கள் நடைபெற்ற வண்ணமுள்ளன. அவைகள் அனைத்தும் சட்டப்படி செல்லுபடியான மசோதாவொன்று நான் கொண்டுவந்து நிறைவேற்றி விட்டேன்."

**(ஆந்திராவிலுள்ள தெனாலியில் கவி ராசு ராமசாமி சவுதரிஆவுல கோபால கிருஷ்ண மூர்த்தி "பவ விகாச கேந்திர"த்தை 29.1.1968 அன்று திறந்து வைத்து அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரை )**

# கல்வி!



கல்வி என்பது ஒரு மனிதனுக்குக் கற்பிக்கப்பட வேண்டிய அவசியம் எல்லாம், ஒருவன். தனது வாழ்நாளில் சுதந்திரத்தோடு வாழ்வதற்குத் தகுதிப் படுத்துவது என்பதே ஆகும். அல்லது, உலகில் நல் வாழ்க்கை வாழத் தகுதி உடையவனாக்குவது என்பதாகும். அதாவது, ஒவ்வொருகாரியத்துக்கும் மற்றவர்களை எதிர் பார்த்து, மற்றவர்கள் ஆதிக்கத்தில் இருந்தோ அல்லது தனக்கு மற்றவர்கள் வழிகாட்டக் கூடிய நிலையிலோ மனிதன் இல்லாமல் சுதந்திரத்தோடும் சுய அறிவோடும் வாழத் தகுதி உடையவனாக வேண்டும்.

**-தந்தை பெரியார்**

# பெரியாரைக் குறிப்பிடாமல் பேச முடியாது!



## முத்தமிழறிஞர் கலைஞர்

பெரியாருடைய பள்ளியிலே சட்டாம் பிள்ளையாக இருந்து நம்மை வழி நடத்தியவர் பேரறிஞர் அண்ணா! அந்தக் கல்லூரியிலே படித்த மூத்த மாணவர்களிலே ஒருவன் நான். நான் தான் இன்றைக்கு உங்களை யெல்லாம் சந்திக்கிறேன் என்றால் எப்படி? எனக்குப் பகுத்தறிவு பாடம் போதித்த பெரியாரை மறவாமல் என்னுடைய உள்ளத்திலே சுயமரியாதை உணர்வை விதைத்த அய்யாவை மறவாமல், அந்த பெரியார் தந்த அருமையான கொள்கைகளையெல்லாம் நாட்டிலே பரப்ப வேண்டும் என்ற அந்த உணர்வோடு உங்களையெல்லாம் சந்திக்கிறேன்.

இன்று உங்களுக்குக் கூட ஒரு வியப்பாக இருக்கும் என்ன கருணாநிதியை அழைத்து கூட்டம் போட்டால் அவர் தேர்தலைப் பற்றி பேசுவார், உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களியுங்கள் என்று கேட்பார் என்று எண்ணினால் பெரியாரைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறாரே! அண்ணாவைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறாரே! என்று நீங்கள் கருதுவீர்களே யானால் நான் உங்களுக்குச் சொல்கிறேன், கருணாநிதி யாரைப் பற்றிப் பேசினாலும், யாரைப் பற்றி புகழ்ந்துரைத்தாலும், யாரைப் பற்றி கவிதை பாடினாலும் அதற்கெல்லாம் மூலவித்தாக இருப்பது சுயமரியாதை இயக்கம், பகுத்தறிவு இயக்கம். தந்தை பெரியாருடைய போதனைகள், அறிஞர் அண்ணாவினுடைய அறிவுரைகள் இவைகள் இல்லாமல் கருணாநிதியால் பேச முடியாது!


# பெரியாரிடம் உணர்வு பெற்றேன்!


## இனமானப் பேராசிரியர்



நான் மாணவனாக இருந்தபோது என்னுடைய உள்ளத்தில் ஆழமாகப் பதியுமாறு உணர்வுகளை ஏற்படுத்தியவர் தந்தை பெரியார் அவர்கள். நான் தமிழ்ப் பற்றுள்ள மாணவன். தமிழனாக உணர்வு பெற்ற மாணவன் என்ற நன்மதிப்பைப் பெறுவதற்குக் காரணம் தந்தை பெரியார் அவர்கள் ஊட்டிய தன்மான உணர்வும் பகுத்தறிவுச் சிந்தனையுமே ஆகும். அந்த உணர்வுகளிலே ஏற்பட்ட பற்றினால், என்னை நான் ஓர் அளவுக்கு அதில் ஈடுபடுத்திக் கொண்டவன் என்ற முறையில் பெரியாருடைய நினைவு பெரியாருடைய கொள்கை, சிந்தனை மக்களிடத்திலே இடம் பெற்றதாக வேண்டும் என்று விரும்புகிறவனாகவே நான் இருந்தேன்.


# நான் யார்!






(ஈ.வெ.ராமசாமி என்கிற நான் திராவிட சமுதாயத்தை திருத்தி உலகில் உள்ள மற்ற சமுதாயத்தைப்போல் ஞானமும் அறிவுமுள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக்கொண்டு அதே பணியாய் இருப்பவன்)

# வெங்காயம்!



நான் கடவுளையும், மதத்தையும், அவை சம்பந்தப்பட்ட எல்லாவற்றையுமே வெங்காயம் என்றுதான் சொல்லுவேன்.

வெங்காயம் என்றால், வித்து இல்லாதது, வெறும் சதை என்பது அச்சொல்லின் அர்த்தம். வெங்காயம், வெறும் காயம்; உயிரற்ற உடல்; விதை இல்லாததால், உரிக்க உரிக்க, தோலாகவே சதையாகவே வந்து, முடிவில் சூனியமாய், விதை இல்லாத தன்மை உடையதாய் முடிவது. ஆகவே விதை வித்து இல்லாத காரணத்தால்தான், அதற்கு வெங்காயம் என்று பெயர்!

**-தந்தை பெரியார்**



கலைஞர் கருணாநிதி பொன் விழா வளைவு
நாள் : 18.09.2023 திங்கட்கிழமை
மாலை 5.00 மணிக்கு
முன்னாள் துணை மேயர்
சி.பி.பவளவண்ணன்
அவர்களால் சைதையில்
முத்தமிழறிஞர்
கலைஞர்
பொன்விழா ஆண்டையொட்டி கட்டப்பட்ட வளைவை
அவரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு
புதுப்பிக்கப்பட்ட
கலைஞர் கருணாநிதி
பொன்விழா வளைவு
திறந்து வைக்க வருகை தரும்
கழக இளைஞர் அணிச் செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை
அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக! வருக!!
மா.சுப்பிரமணியன் B.A.LLB.,
மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
செயலாளர் – சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.
மகிழ்வுடன் வரவேற்கும்...
சைதை மு.மகேஷ்குமார் B.A., M.C
துணை மேயர் - பெருநகர சென்னை மாநகராட்சி
தலைமை செயற்குழு உறுப்பினர்
South digital 9840100489



கலைஞர் 100
1924 - 2023
கலைஞர் மகளிர் உரிமைத் தொகை
ரூ.1000 வழங்கிய
கழக தலைவர்-மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்களுக்கு
நெஞ்சார்ந்த
நன்றி! நன்றி!!
நன்றி!!!
MKSTUDIO
Cell : 9500758141
இங்ஙனம்.
மாண்புமிகு. அர.சக்கரபாணி
உணவு மற்றும் உணவுப்பொருள்
வழங்கல் துறை அமைச்சர்
தே.மதியழகன், MLA
மாவட்ட கழக செயலாளர்
கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க




கலைஞர் 100
1924 - 2023
கலைஞர் மகளிர் உரிமைத் தொகை
ரூ.1000 வழங்கிய
கழக தலைவர்-மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்களுக்கு
நெஞ்சார்ந்த நன்றி!
நன்றி!! நன்றி!!!
9842765443
மாண்புமிகு அர.சக்கரபாணி
உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்
திரு. Y.பிரகாஷ் MLA.,
கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர்
கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தி.மு.க

# தி.மு.க. முப்பெரும் விழா - 2023 (வேலூர்) விருது பெறுவோர் வாழ்க்கைக் குறிப்புகள்!

## கி.சத்தியசீலன்

### பெரியார் விருது



இளவயது முதல் தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர் திரு.சத்தியசீலன் அவர்கள். மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை ஒன்றியம், திருமங்கலம் ஊராட்சிக்குட்பட்ட செண்பகச்சேரி சிற்றூரில் திரு.து.கிருஷ்ணசாமி, திருமதி பொன்னாயாள் இணையரின் இரண்டாவது மகனாக 2.2.1939 அன்று பிறந்தவர் திரு.சத்தியசீலன்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் பேச்சுக்களால் கவரப்பட்டு, தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டு பணியாற்றத் தொடங்கினார். 1956ஆம் ஆண்டு செண்பகச்சேரி கிளைக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்று பணியாற்றினார். 1983ஆம் ஆண்டு மயிலாடுதுறை ஒன்றியச் செயலாளராகப் பொறுப்பேற்றார். 2000ஆம் ஆண்டில் நாகை மாவட்ட துணைச் செயலாளராகவும், பின்னர் பொதுக்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தார். பின்னர் 2006ஆம் ஆண்டில் மயிலாடுதுறை ஒன்றியக் கழகப் பொறுப்பாளராகப் பணியாற்றினார்.

1984ஆம் ஆண்டில் மயிலாடுதுறை சட்டப்பேரவைத் தொகுதிக்கான இடைத் தேர்தலில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1988ஆம் ஆண்டில் மயிலாடுதுறை ஒன்றியப் பெருந்தலைவராக மக்களால் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

இந்த 85 வயதில், இன்றளவும் கழகப் பணியில் தொய்வில்லாமல் பங்கெடுத்து வரும் இவரை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், "சத்தியம் தவறாத சத்தியசீலன்" என்று அழைத்ததை பெருமையுடன் நினைவு கூர்கிறார்.

விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம், இலங்கைத் தமிழர் ஆதரவு போராட்டம், சட்டநகல் எரிப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு ஆறு முறை சிறைவாசம் ஏகினார்.

1960ஆம் ஆண்டில் நாவலர் நெடுஞ்செழியன் தலைமையில், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், திருமதி சத்தியவாணிமுத்து ஆகியோர் முன்னிலையில் ஞாயிற்றுக் கிழமை அன்று மாலை 4.30 - 6.00 மணிக்குள் இராகு காலத்தில் சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டவர். இவரது துணைவியார் பெயர் பன்னீர்செல்வி. இவ்விணையருக்கு வளர்மதி என்ற மகளும், கண்ணன் என்ற மகனும் உள்ளனர்.

திரு. சத்தியசீலன் அவர்கள் கழகத்திற்கு ஆற்றிய பணிகளைப் பாராட்டி, தலைமைக் கழகத்தின் சார்பில் இன்று (17.9.2023), 'வேலூர், பள்ளிகொண்டா'வில் நடைபெறும் முப்பெரும் விழாவில், தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டில், மாண்புமிகு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் **"பெரியார் விருது"** வழங்கிச் சிறப்பிக்கிறார்.

வேலூர்
17.09.2023

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## மாண்புமிகு. இ.பெரியசாமி

### கலைஞர் விருது



திண்டுக்கல் மாவட்டம், திரு.இருளப்பன் சேர்வை வத்தலகுண்டு நகரத்தில் திருமதி அலமேலு அம்மாள் இணையருக்கு 6.1.1953ஆம் ஆண்டு பிறந்த திரு. இ.பெரியசாமி அவர்கள், கல்லூரி மாணவராக இருந்த காலத்திலேயே மாணவர் தி.மு.க.வில் தன்னை இணைத்துக் கொண்டு தனது கழகப் பணியைத் தொடங்கினார். சட்டக் கல்லூரியில் பயின்ற காலத்தில் இரண்டாம் ஆண்டில் போராட்டத்தில் கலந்து கொண்டதால், கல்லூரியிலிருந்து வெளியேற்றப்பட்டார். அன்று முதல் தீவிர கழகப் பணியில் முழுமையாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

கழகம் நடத்திய பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு பல முறை கைதாகி சிறைவாசம் அனுபவித்தவர் இ.பெரியசாமி. தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்ட அனைத்துப் போராட்டங்களையும் திண்டுக்கல் மாவட்டத்தில் வெற்றிகரமாக நடத்தி எழுச்சி ஏற்படுத்தியவர் இ.பெரியசாமி அவர்கள்.

1992ஆம் ஆண்டில் மாவட்டக் கழகச் செயலாளராகப் பொறுபேற்ற இ.பெரியசாமி அவர்கள் 2014ஆம் ஆண்டு வரை, இடையில் இரண்டாண்டு காலம் திண்டுக்கல் கிழக்கு, திண்டுக்கல் மேற்கு மற்றும் தேனி மாவட்டங்கள் அடங்கிய மண்டலப் பொறுப்பாளராகப் பணியாற்றினார். இதே காலத்தில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட அவைத்தலைவராகவும் பொறுப்பேற்றிருந்தார். 2003ஆம் ஆண்டு முதல் 2023ஆம் ஆண்டு வரை கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினராகப் பொறுப்பு வகித்து, 2015ஆம் ஆண்டில் கழகத் துணைப் பொதுச்செயலாளராக தேர்வு செய்யப்பட்டு பணியாற்றி வருகிறார்.

1986ஆம் ஆண்டில் வத்தலகுண்டு ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1991ஆம் ஆண்டு வரை பணியாற்றினார். 1990ஆம் ஆண்டில் வத்தலகுண்டு நகர கூட்டுறவு வங்கித் தலைவராகப் பொறுப்பேற்றார்.

1989ஆம் ஆண்டில் ஆத்தூர் தொகுதியில் போட்டியிட்டு சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இ.பெரியசாமி, 1996, 2001, 2006, 2011, 2016, 2021 ஆகிய ஆண்டுகளில் ஏழு முறை ஆத்தூர் தொர்குதியில் போட்டியிட்டு தொடர்ந்து வெற்றி பெற்று வருகிறார். 2021ஆம் ஆண்டில் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைவரையும் டெபாசிட் இழக்க வைத்தவர் இ.பெரியசாமி.

1996ஆம் ஆண்டு தமிழக அரசின் ஊரகத் தொழில், பத்திரப் பதிவு மற்றும் சத்துவுணத் திட்ட அமைச்சராகப் பொறுப்பேற்று பணியாற்றியதோடு, 2006ஆம் ஆண்டு வருவாய், சட்டம், வீட்டுவசதி மற்றும் சிறைத் துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்தார். 2021ஆம் ஆண்டு முதல் கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் நலத்துறை அமைச்சராகவும், தற்போது ஊரக வளர்ச்சித் துறை அமைச்சராகவும் பொறுப்பு வகித்து வருகிறார்.

மாவட்டச் செயலாளராகப் பொறுப்பு வகித்த காலத்தில் 1993ஆம் ஆண்டு தென் மாவட்டங்களிலேயே அதிக நிதியாக பத்து லட்சம் ரூபாய் திரட்டி, கழக வளர்ச்சி நிதி, முரசொலி அறக்கட்டளை நிதியாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம் வழங்கினார்.

"தம்பி பெரியசாமி இன்றைக்கு அமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்றாலும்கூட, இந்தப் பொறுப்பு தனக்கு கிடைக்கும் என்று எண்ணி இந்த இயக்கத்திலே அவர் அடியெடுத்து வைத்தவர் அல்ல. திராவிட இயக்க உணர்வுகளை உள்ளத்தில் ஏந்திக் கொண்டு அவர் ஆற்றிய அரும்பணி, அவர் ஏற்றுக் கொண்ட அடக்குமுறைகளால் அவர் சந்தித்த எதிர்ப்புகள், இவற்றையெல்லாம் தாங்கித்தான் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் வழங்கிய லட்சியத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற உள்ள உறுதியோடு அவர் இந்தப் பணியை மேற்கொண்டார்" என்று உரையாற்றினார்.

சமீபத்தில் இராமநாதபுரத்தில் நடந்து முடிந்த தென்மண்டல வாக்குச் சாவடி நிலை முகவர்கள் மாநாட்டில் கலந்து கொண்ட கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "இந்த நிகழ்ச்சியை மிகுந்த எழுச்சியோடும், உணர்ச்சியோடும் ஏற்பாடு செய்திருக்கும் மாண்புமிகு அமைச்சர் இ.பெரியசாமி அவர்களைப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். பெரிய மீசை, பெரிய கிருதா என்று கட்டிளம் காளையாக வலம் வந்தவர், இப்பொழுது மீசை, கிருதாவோடு தாடியும் சேர்ந்துவிட்டது. வெள்ளி போன்ற தாடி, தலை நரைத்தாலும் கழகப் பணிக்கு நரையில்லை, தளர்வில்லை என்று பணியாற்றி வருகிறார் நம்முடைய ஐ.பி." என்று பாராட்டினார்.

கழகத் தலைவரின் நம்பிக்கையையும் முத்தமிழறிஞர் கலைஞரின் நம்பிக்கையையும் பெற்று ஏறத்தாழ 50 ஆண்டு காலத்துக்கு மேல் தீவிர கழகப் பணியாற்றி வரும் திரு. இ.பெரியசாமி அவர்களின் ஈடுஇணையற்ற பணிகளைப் பாராட்டிடும் வகையில், தலைமைக் கழகத்தின் சார்பில் இன்று (17.9.2023), 'வேலூர், பள்ளிகொண்டா'வில் நடைபெறும் முப்பெரும் விழாவில், தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டில், மாண்புமிகு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் **"கலைஞர் விருது"** வழங்கிச் சிறப்பிக்கிறார்.

வேலூர்
17.09.2023

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## க.சுந்தரம்

### அண்ணா விருது



ஒருங்கிணைந்த செங்கல்பட்டு மாவட்டம், பொன்னேரி சட்டமன்றத் தொகுதிக் குட்பட்ட மீஞ்சூரில் நினைவில் வாழும் திரு.கன்னி - திருமதி கோவிந்தம்மாள் இணையரின் ஐந்தாவது மகனாக 1.7.1948 அன்று பிறந்தவர் திரு. க.சுந்தரம் அவர்கள்.

தொடக்கக் காலத்தில் தனியார் தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றி வந்த க.சுந்தரம் இளமைக் காலம் தொட்டு தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரது கொள்கைகளில் ஈர்ப்பு கொண்டு கழகப் பணியாற்றத் தொடங்கினார்.

கழகத்தில், மீஞ்சூர் ஒன்றியப் பிரதிநிதி, ஒன்றிய துணைச் செயலாளர், ஒன்றியச் செயலாளர், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர் திரு.க.சுந்தரம். பின்னர், கழகத் துணைப் பொதுச்செயலாளராக தலைவர் கலைஞர் அவர்களால் நியமிக்கப்பட்டு பொறுப்பு வகித்தார். தற்போது, மாநில ஆதிதிராவிடர் நலக்குழு தலைவராக, கழகத் தலைவர் தளபதி அவர்களால் நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகிறார்.

1989ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டப்பேரவை தேர்தலில் பொன்னேரி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற திரு.க.சுந்தரம் ஓராண்டுக்குப் பிறகு முத்தமிழறிஞர் கலைஞர் அமைச்சரவையில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்தார். "தான் அத்துறை அமைச்சராக இருந்த காலத்தில் அருந்ததியருக்கு 3 சதவிகித இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நடைமுறைக்கு கொண்டு வந்தது தனது வாழ்வில் மறக்க முடியாத ஒன்று" என்று க.சுந்தரம் மகிழ்ந்து நினைவு கூர்கிறார். அத்துடன் இந்தியாவிலேயே முதல்முறையாக ஆதிதிராவிடர் மக்களுக்குத் தொகுப்பு வீடுகளை அன்றைய ஒன்றிய அமைச்சர் பாபு ஜெகஜீவன்ராம் அவர்களைக் கொண்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திறக்கச் செய்தார் என்பதையும் பெருமையுடன் குறிப்பிடுகிறார்.

1996ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று, முத்தமிழறிஞர் கலைஞர் அமைச்சரவையில் பால்வளத் துறை மற்றும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றார்.

அந்த காலகட்டத்தில், சென்னையில் கூவம் ஆறு, பக்கிங்காம் கால்வாய் ஆகிய ஆற்றங்கரைகளில் வசித்து வந்த மக்கள் வாழ்வதற்கு, சென்னை கண்ணகி நகர் பகுதியில் 5,000 குடிசைப் பகுதி மாற்று வாரிய வீடுகளை கட்டித் தந்தது தமக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழங்கிய பெரும் வாய்ப்பு என்று கூறி மகிழ்கிறார் க.சுந்தரம் அவர்கள்.

தற்போது மாநில ஆதிதிராவிடர் நலக்குழுத் தலைவராக பொறுப்பு வகித்து வரும் க.சுந்தரம், கழகத்தால் அறிவிக்கப்பட்ட அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

1983ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில் எழிலினி அவர்களை மணந்து கொண்டார். இவ்விணையருக்கு மருத்துவர் செல்லகுமார், மீஞ்சூர் பேரூர்ச் செயலாளர் தமிழ்உதயன், பொறியாளர் அணியில் பணியாற்றி வரும் தமிழ்ப்பிரியன் ஆகிய மூன்று மகன்கள் உள்ளனர்.

இத்தகு சிறப்புக்குரிய திரு. க.சுந்தரம் அவர்களின் கழகப் பணியினைப் பாராட்டும் வகையில் தலைமைக் கழகத்தின் சார்பில் இன்று (17.9.2023), 'வேலூர், பள்ளிகொண்டா'வில் நடைபெறும் முப்பெரும் விழாவில், தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டில், மாண்புமிகு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் **"அண்ணா விருது"** வழங்கிச் சிறப்பிக்கிறார்.

வேலூர்
17.09.2023

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திருமதி.மலிகா கதிரவன்

### பாவேந்தர் விருது



கழகப் பணியில் தம்மை ஈடுபடுத்திப் பணியாற்றி வரும் திருமதி மலிகா கதிரவன் அவர்கள், தொழிலதிபர் எம்.எஸ்.முகமது நயினார், ஹாஜிமா முஹைதீன் பாத்திமா இணையருக்கு மகளாக 7.7.1945 அன்று பிறந்தார். 1960ஆம் ஆண்டில் முஹமது முஸ்தபா, வெள்ளி இஸ்மாயில் பீவி ஆகியோரின் மகனான சம்சுதீன் அவர்களை மணம் செய்து கொண்டார். சம்சுதீன் அவர்கள் இளமைக் காலம் தொட்டு கழகப் பணியாற்றி வந்தவர். அவருடைய அரசியல் செயல்பாடுகளால் ஈர்க்கப்பட்ட திருமதி மலிகா கதிரவன், அவரோடு இணைந்து கழகப் பணியில் தன்னையும் ஈடுபடுத்திக் கொண்டார்.

கழக வளர்ச்சியில் தீவிரமாகப் பணியாற்றி வந்த சம்சுதீன் அவர்களின் பெயரை "கதிரவன்" என்று இனமானப் பேராசிரியர் அவர்கள் அழைத்த நாள் முதல் தன்னுடைய பெயரை 'கதிரவன்' என்றே மாற்றிக் கொண்டார்.

1967ஆம் ஆண்டு தென்காசி தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்த கதிரவன் அவர்கள், அதே தொகுதியில் 1968ஆம் ஆண்டு நடைபெற்ற இடைத்தேர்தலில் பெரும் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

பின்னர் 1971, 1989 ஆகிய ஆண்டுகளில் சட்டமன்றத் தேர்தல்களில் வெற்றி பெற்று 1989ஆம் ஆண்டில் சட்டப்பேரவை தலைமைக் கொறடாவாகப் பொறுப்பேற்றார். 1972ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்று பணியாற்றினார். கழகத்தின் பல்வேறு பொறுப்புகளில் திறம்படப் பணியாற்றி வந்த திரு.கதிரவன் அவர்கள் 23.4.1995 அன்று மறைவெய்தினார்.

தனது கணவரின் கழகப் பணிகளை திருமதி மலிகா சம்சுதீன் தொடர்ந்து ஆற்றி வருகிறார். சாட்டையடி சக்திவேல் அவர்கள் தொடங்கிய கலைஞர் தமிழ்ச் சங்கத்தில் இணைந்து பொருளாளர் பொறுப்பு வகித்தார். ஆசிரியர் கி.வீரமணி, சுப.வீரபாண்டியன், இரா.ஆவுடையப்பன், மகளிர் அணிச் செயலாளராக இருந்த கனிமொழி, எம்.பி., கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் ஆகியோரை அழைத்து பொதுக்கூட்டங்கள் நடத்தி, நலத்திட்ட உதவிகளைச் செய்து வந்துள்ளார்.

சமீபத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா நிகழ்வாக புதிய கொடிக் கம்பங்கள் அமைத்து, கழகக் கொடிகளை ஏற்றியுள்ளார்.

தம் கணவர் மறைவுக்குப் பின்னர் தாமே கழகத்தில் ஈடுபாடு கொண்டு, தன்னெழுச்சியாகக் கழகப் பணிகளை மேற்கொண்டு கணவரின் வழியில் நடைபோட்டு பணிகளை மேற்கொண்டு வரும் திருமதி மலிகா கதிரவன் அவர்களின் கழகப் பணியினைப் பாராட்டும் வகையில் தலைமைக் கழகத்தின் சார்பில் இன்று (17.9.2023), 'வேலூர், பள்ளிகொண்டா'வில் நடைபெறும் முப்பெரும் விழாவில், தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டில், மாண்புமிகு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் **"பாவேந்தர் விருது"** வழங்கிச் சிறப்பிக்கிறார்.

வேலூர்
17.09.2023

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# தி.மு.க. முப்பெரும் விழா - 2023 (வேலூர்)
# விருது பெறுவோர் வாழ்க்கைக் குறிப்புகள்!

## ந.இராமசாமி

## பேராசிரியர் விருது



தன்னுடைய பள்ளிக் காலத்திலேயே கழகப் பணிகளில் ஆர்வம் கொண்டு, தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டவர் திரு.ந.இராமசாமி அவர்கள். கர்நாடக மாநிலம், பெங்களூரில் 15.8.1936 அன்று திரு. நடேசன், திருமதி கண்ணம்மாள் இணையரின் மூத்த மகனாகப் பிறந்த திரு.ராமசாமி அவர்களுக்கு இரண்டு சகோதரர்களும், இரண்டு சகோதரிகளும் உள்ளனர்.

1951ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற தி.மு.க. முதல் மாநில மாநாட்டில் கலந்து கொள்ள தன்னுடைய நண்பர்களுடன் பெங்களூரில் இருந்து சென்னை வந்த ந.இராமசாமி, அன்று முதல் இன்று வரை கழகத்தில் தீவிர ஈடுபாடு கொண்டு பணியாற்றத் தொடங்கினார்.

கர்நாடக மாநில தி.மு.கழகத்தில் 1956ஆம் ஆண்டில் மாவட்ட பிரதிநிதியாக பொறுப்பு வகித்து, தன் பணியை தொடங்கிய அவர் பெங்களூரில் நடைபெற்ற இரண்டு கழக மாநாடுகளிலும் வரவேற்புக்குழு உறுப்பினராக பணியாற்றி உள்ளார்.

1965ஆம் ஆண்டு கர்நாடக மாநில தி.மு.கழகத்தின் துணை அமைப்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு, கர்நாடக மாநிலத்தில் மைசூர், பத்ராவதி, சிமோகா, தாவன்கெரே, மங்களூர், நஞ்சன்கூடு ஆகிய நகரங்களில் கழகக் கிளைகளை அமைத்து மாநிலக் கழகத்துக்கு வலு சேர்த்தார்.

கர்நாடக மாநிலத்தில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், நாவலர் நெடுஞ்செழியன், பேராசிரியர், கே.ஏ.மதியழகன், ஈ.வே.கி.சம்பத், என்.வி.நடராஜன், ப.உ.சண்முகம், சி.பி. சிற்றரசு, ஏ.வி.பி.ஆசைத்தம்பி, கவிஞர் கண்ணதாசன், சத்தியவாணிமுத்து, டி.கே.சீனிவாசன், நாஞ்சில் மனோகரன், மதுரை முத்து, அலமேலு அப்பாதுரை, ஏ.கே.வேலன் ஆகியோரை அழைத்து கர்நாடக மாநிலத்தில் பொதுக்கூட்டங்கள் நடத்தி, கழகப் பிரச்சாரத்தை தீவிரமாக மேற்கொண்டார். கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கு பெற்று பலமுறை சிறைவாசம் அனுபவித்தவர் திரு.ந.இராமசாமி.

கர்நாடக மாநிலம் பெங்களூரில் தொழிற்சாலைகளில் பணியாற்றி வரும் தமிழர்களின் நலனுக்காக 1958ஆம் ஆண்டில் பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்தையும், பொதுத் தொழிலாளர்கள் சங்கத்தையும் தொடங்கி, பல்வேறு தொழிலாளர் நலப் போராட்டங்களை நடத்தி, தொடர்ந்து தொழிலாளர் முன்னேற்றச் சங்கங்களை நிறுவி, தொடர்ந்து செயல்பட்டு வருகிறார்.

மாநிலக் கழகத்தின் சார்பில் கழக முன்னோடிகளை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும் விருது வழங்கும் விழா நடத்தி விருதுகள் வழங்கி வருகிறார்.

1960ஆம் ஆண்டு திருமதி என்.ஆர்.வேணி அவர்களை மணம் புரிந்தார். இவ்விணையருக்கு ஆர்.ரவி, ஆர்.ரமேஷ் ஆகிய மகன்களும், சாந்தி என்ற மகளும் உள்ளனர்.

இத்தகைய சிறப்பான பணியை கழகத்துக்காக ஆற்றி வரும் திரு. ந.இராமசாமி அவர்களுக்கு, தலைமைக் கழகத்தின் சார்பில் இன்று (17.9.2023), 'வேலூர், பள்ளிகொண்டா'வில் நடைபெறும் முப்பெரும் விழாவில், தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டில், மாண்புமிகு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் **"பேராசிரியர் விருது"** வழங்கிச் சிறப்பிக்கிறார்.

**வேலூர்**
**17.09.2023**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு!

*சேலம், செப். 18 -*

தமிழக நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக நேற்று முன்தினம் 2வது நாளாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து காணப்படுகிறது. மேட்டூர் அணையில் இருந்து கடந்த 3 மாதத்துக்கும் மேலாக டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக அணையின் நீர்மட்டம் வேகமாக குறைந்து வருகிறது. மேலும் இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை சரிவர பெய்யாததால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்து காணப்பட்டது.

இதற்கிடையே தமிழக நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழை காரண மாக நேற்று 2வது நாளாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து காணப்படுகிறது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 41.76 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 2 ஆயிரத்து 47 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 6500 கனஅடி வீதம் தொடர்ந்து தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.

# ஐயா! நின் நினைவிடத்தில் சூளு ரைப்போம்!



ஈரோட்டு நாயகனே! தமிழர் தங்கள்
இனமானச் சூரியனே! எட்டுத் திக்கும்
மார்தட்டிச் சுழன்றுவந்தாய்! மனித னுக்கு
மானமும் அறிவும்தான் அழகே என்றாய்!
கூர்மிக்கச் சிந்தனையால் குரல்கொ டுத்தாய்!
கொட்டாவித் துயில்கலைத்தாய்! எழுச்சி தந்தாய்!
போராடி உரிமைகளைப் பெற்றுத் தந்தாய்!
பொதுப்பணிக்கே கொடைதந்தாய் உனது வாழ்வை!

பாடிவைத்த பழமைகளைச் சாடி வைத்தாய்!
பாமரர்க்கும் பகுத்தறிவை விதைத்தாய்! மூடக்
காடெரித்த யுகக்கனலே! ஐயா, உன்றன்
கைத்தடியின் வளைவிலும்கம் பீரம் உண்டே!
தாடிவைத்த குழந்தைநீ சிரிக்கும் போதில்
தலைமுதல்பா தம்வரைக்கும் மகிழ்ச்சி பொங்கும்!
ஏடெடுத்தே நீ,கணைகள் தொடுக்கும் போதில்
எதிரிகளின் அடித்தளமே நொறுங்கிப் போகும்!

மூன்றுவிழுக் காடுள்ள ஒருகூட் டத்தின்
மூவாயி ரம்வருட ஆதிக் கத்தைச்
சான்றுசொல்லி உலகுக்கே எடுத்து ரைத்தாய்!
சனாதனத்தின் கொடுமைகளைத் தோலு ரித்தாய்!
ஆன்றோராய் சான்றோராய் கல்வி பெற்றே
அடித்தட்டு மக்களையும் உயரச் செய்தாய்!
தோன்றின்நற் புகழோடு தோன்றி வந்தாய்!
தொண்டுசெய்து பழுத்தபழம் ஆகி நின்றாய்!

அலைவைத்த கடலைப்போல் இயங்கி வந்தாய்!
ஆயிரமா? அதற்கதிகம் பிறைகள் கண்டாய்!
வலைவைத்துப் பார்த்தார்கள், அறுத்தெ றிந்து
வலம்வந்தாய் நாடெங்கும்! கொண்டு வந்து,உன்
தலைவைக்க வேண்டும்என்ற நரிக்கூட் டத்தைத்
தரைமட்டம் செய்தாய்! நம் கலைஞ ருக்குச்
சிலைவைத்துப் பேரன்பைப் பொழிந்தாய்! என்றும்
சிதையாத புகழுக்கே புகழ்கொ டுத்தாய்!

தடியெடுத்து நீஅன்று நடந்த தால்தான்
தமிழர்க்கே அறிஞர்அண்ணா கிடைத்தார்! உன்றன்
குடியரசின் உலைக்கூடத் தகிப்பி லேதான்
" குவளைப்பூ" போர்க்கருவி ஆன தென்பேன்!
திடலுக்குள் மட்டும்நீ இல்லை! கண்ணீர்த்
திவலைகளைத் துடைத்தெறிந்து சொல்வேன், எங்கள்
உடலுக்குள் உயிரணுக்க ளெல்லாம் உள்ளாய்!
உனைவிட்டுத் தமிழர்க்கு வரலா றேது?

அரியார்க்கும் அரியாராய் பிறந்து வந்தாய்!
அடுத்தடுத்துச் சாதனைகள் புரிந்து வந்தாய்!
வரலாற்றில் "ஈழவர்"தம் உரிமை வென்ற
" வைக்கம்நூற் றாண்டு"இது! மறக்கப் போமோ?
பெரியார்க்கும் பெரியார்நீ! அதனா லன்றோ
பெண்ணுரிமை முன்னுரிமை காணச் செய்து
சரியான பாதைக்கே அழைத்து வந்தாய்!
சமத்துவம் சமதர்மம் தழைக்கச் செய்தாய்!

வியாபாரக் குடும்பத்தில் பிறந்தாய்! உன்னை
விலைபேச எவராலும் முடிய வில்லை!
நியாயத்தின் வடிவம்நீ, அதனால் உன்னை
நீதிமன்றப் பொய்வலைகள் நெருங்க வில்லை!
தியாகம்நீ செய்யவில்லை! தியாகம் உன்னைச்
செய்தது!நீ தரைவாழ்ந்த உலக வாழ்க்கை
மயானத்தின் முடிவல்ல! காலத் தாலும்
மடியாத சரித்திரத்தின் புதுத்தொ டக்கம்!

நீண்டநெடுந் தொலைநோக்கில் உனது கொள்கை
நீட்சிகண்டு "தளபதி"யின் ஆட்சி கண்டு
தாண்டிமிகக் குதிக்கிற து பகைவர் கூட்டம்!
தலைதூக்கி "மனுதர்மம்" போடும் ஆட்டம்!
மீண்டும்உன்றன் "கைத்தடிக்கு" வேலை வந்து
விட்டதையா! சனாதனத்தை விரட்டு தற்கே!
மூண்டெழுவோம் ஐயா,உன் நினைவி டத்தில்!
முறியடிப்போம் சதியை!எனச் சூளு ரைப்போம்!



- கவிச்சுடர்
**கவிதைப்பித்தன்**

சனாதனம் குறித்து சங்கு ஊதி தற்காத்துக்கொள்ள மோடி முயலும் சூழலில்

# இரண்டே ஆண்டுகளில் வாக்குறுதிகளை நிறைவேற்றும் தி.மு.க. அரசைப் பாராட்டுகிறோம்!

## 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை வரவேற்று - இரா.முத்தரசன் அறிக்கை!

*சென்னை, செப்.18 -*

'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை' வரவேற்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கடந்த சட்டமன்ற தேர்தலில் கொடுத்த வாக்குறுதியை பலவற்றை நிறைவேற்றியுள்ள தமிழ்நாடு அரசு, தற்போது முத்திரை பதிக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை நிறைவேற்றி யுள்ளதை, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு மாநில செயற்குழு பாராட்டி வரவேற்கின்றது.

இத்திட்டத்தின் மூலம் தமிழகத்தை சேர்ந்த, ஏழை, எளிய, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின மக்கள் உட்பட தகுதி வாய்ந்த ஒரு கோடியே ஆறு லட்சத்து ஐம்பதாயிரம் தாய்மார்களும், சகோதரிகளும் பயன் அடைகின்றனர்.

மாதம் ரூபாய் ஆயிரம் வீதம் ஆண்டிற்கு பணிரண்டாயிரம் ரூபாய் ஒவ்வொரு வரும் பயன் பெறுகின்றனர். இத்திட்டத்தின் பயனாளிகள் பணம் பெறுவதற்கு அலைந்திட வேண்டிய அவசியமில்லை. அவரவர் வங்கிக் கணக்கில் பணம் அனுப்புவதுடன் அவரவர் தேவைக்குரிய காலத்தில் ஏடிஎம் கார்டு மூலம் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளும் முழுமையாக செயல்படுத்தப் பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடிகள், ஒன்றிய அரசின் ஒத்துழைப்பு இல்லாமை போன்ற கடும் நெருக்கடிகளுக்கு மத்தியிலும், தான் கொடுத்திட்ட வாக்குறுதியை நிறை வேற்றிட வேண்டும் என்கிற மன உறுதியுடன் நிறைவேற்றிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

தமிழக அரசு மேற்கொண்ட இத்தகைய புரட்சிகரமான திட்டத்தை மற்ற மாநிலங்களும் பின்பற்றத் தொடங்கியிருப்பதன் மூலம் இத்திட்டம் எத்தகைய வரவேற்பைப் பெற்றுள்ளது என்பதை உணர முடியும்.

தமிழ்நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க. இத்திட்டத்தை வரவேற்கிறதா? அல்லது எதிர்க்கின்றதா என்பது குறித்து வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்.

அதே போன்று ஒன்றியத்தில் ஆளும் கட்சியாக உள்ள பா.ஜ.க. இத்திட்டம் குறித்து தனது நிலை என்னவென்பதனையும் பகிரங்கமாக தெரிவித்திடல் வேண்டும்.



நாள்தோறும் அறிக்கைகளும், பேட்டிகளும் அளித்து வரும் பா.ஜ.க.வின் மாநில நியமன தலைவர் அண்ணாமலை இத்திட்டம் குறித்து தனது நிலைபாட்டை வெளிப்படுத்திட வேண்டுகிறோம்.

ஒன்றிய அரசு குறிப்பாக பிரதமர் மோடி 2014ம் ஆண்டு கொடுத்திட்ட ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை, கறுப்பு பணத்தை மீட்டு இந்திய குடிமகன் ஒவ்வொருவருக்கும் ரூ.15 லட்சம் வங்கியில் வரவு வைத்தல், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தல், விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கல் என எந்த ஒரு வாக்குறுதியையும் கடந்த 10 ஆண்டுகாலமாக நிறை வேற்றவில்லை. மாறாக சனாதனம் குறித்து சங்கு ஊதி தற்காத்து கொள்ள மோடி முயலும் சூழலில் ஆட்சிக்கு வந்த இரண்டே ஆண்டுகளில் கொடுத்த வாக்குறுதிகள் ஒவ்வொன்றையும் நிறைவேற்றிக் கொண்டுள்ள திமுக அரசைப் பாராட்டுகின்றோம்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.






முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரியில் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து ஈரோடு மாவட்டம் திண்டல் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கலைஞர் மகளிர் உரிமை திட்ட ATM அட்டை மற்றும் மகளிர் உரிமை கையேடினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார். நிகழ்வில் மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராசு, அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, மாநகராட்சி மேயர் நாகரத்தினம், மாவட்ட வருவாய் அலுவலர் சந்தோஷினி சந்திரா, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மரு.மணீஷ், மாநகராட்சி துணை மேயர் வி.செல்வராஜ், மாவட்ட ஊராட்சி தலைவர் நவமணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்தநாள் அன்று காஞ்சிபுரம் மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் மகளிருக்கு மாதம் ரூ.1,000/ வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், நிழலி ஆர்.வி.எல் மண வளாகத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் மகளிருக்கு வங்கி பற்று அட்டைகள் மற்றும் மகளிர் உரிமைக் கையேடுகள் வழங்கும் திட்டத்தை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் துவக்கி வைத்து மகளிருக்கு வங்கி பற்று அட்டைகள் (ஏ.டி.எம் காட்ஸ்) மற்றும் மகளிர் உரிமைக் கையேடுகளை வழங்கினார்கள். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.சாமிநாதன், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர் இல.பத்மநாபன், மாநகராட்சி மேயர், திருப்பூர் வடக்கு மாநகர கழக செயலாளர் ந.தினேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் பவன்குமாhர் ஜி.கிரியப்பனவர், ஒன்றிய கழக செயலாளர்கள் சு.சந்திரசேகரன், சிவா.செந்தில்குமார் உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



திருச்சியில் தந்தை பெரியார் அவர்களின் 145வது பிறந்த நாளை முன்னிட்டு மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு கழக முதன்மைச் செயலாளரும், அமைச்சருமான கே.என்.நேரு தலைமையில் தி.மு.க.வினர் மாலை அணிவித்து மரியாதை. செய்தனர். இந்த நிகழ்ச்சியில் மாநகராட்சி மேயர் அன்பழகன், மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, சட்டமன்ற உறுப்பினர் ஸ்டாலின் குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அன்பில் பெரியசாமி, ஊராட்சி குழு தலைவர் தர்மன் ராஜேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் விஜயா ஜெயராஜ், சேர்மன் துரைராஜ், கருணாநிதி, டோல்கேட் சுப்பிரமணி, துர்கா தேவி, தொ,மு,ச, குணசேகர், கண்ணன், செவந்தி லிங்கம், மோகன்தாஸ், நாகராஜ், கிராப்பட்டி செல்வம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மரியாதை செலுத்தினர். பின்னர் அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் அனைவரும் சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

### புதுக்கோட்டையில்

# கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கல்!

## அமைச்சர் எஸ். ரகுபதி தொடங்கி வைத்தார்!

புதுக்கோட்டை, செப். 18 -

தமிழக அரசின் மகளிர் உரிமை தொகை தொடக்க விழா மற்றும் தொகை பெறப்போகும் பெண்களுக்கு ஏ.டி.எம். கார்டு வழங்கும் நிகழ்ச்சி புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆட்சியர் மெர்சி ரம்யா தலைமையில் நடைபெற்றது.

இதில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கலந்து கொண்டு உரிமைத் தொகை வழங்கும் திட்டத்தையும் ஏடிஎம் கார்டு வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வழங்கினார்

இதன் பின்னர் செய்தியாளரிடம் பேசிய அமைச்சர் எஸ்.ரகுபதி,

பெண்களுக்கு எல்லாம் மகிழ்ச்சியான நாள் தி.மு.க. தேர்தல் அறிக்கையில் தெரிவித்தபடி முதலமைச்சர் மகளிர் உரிமைத் தொகையை ஆயிரம் ரூபாயை வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார்.

இது மாதா மாதம் தொடரும் திட்டம்.

பெண்களின் முன்னேற்றத்தை உயர்த்துவதற்காக வாழ்க்கை பாதையை முன்னேற்றுவதற்காக நடவடிக்கை எடுத்துள்ளது தான் திராவிட மாடல்.

காய்த்த மரத்தில் தான் கல்லடி படும் . அதே போல் நாங்கள் நல்ல திட்டங்களை தேர்தல் அறிக்கையில் தெரிவித்தவை மற்றும் தெரிவிக்காதவை ஆகியவற்றை செயலாற்றி வருகிறோம்.

மக்களுக்கு தேவையான நல்ல திட்டங்களை நாங்கள் செயல்படுத்தி வருகிறோம்.

இதை அனைவரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் ஒரு சிலர் வசை பாடுவார்கள் வசை பாடுபவர்கள் வசை பாடி செல்லட்டும் அதைப் பற்றி எங்களுக்கு கவலை கிடையாது. எங்களுடைய நோக்கம் என்பது மக்கள் நலன் மக்களுக்காக பாடுபடுவது,

இந்தத் திட்டத்தில் பயன் பெறாதவர்கள் மேல் முறையீடு செய்யலாம் மேல்முறையீட்டில் வருவாய் கோட்டாட்சியர் விசாரணை செய்து தகுதியானவர் என்று கண்டறியப்பட்டால் அவர்களுக்கு உறுதியாக உரிமைத் தொகை வழங்கப்படும்.

சிறைச்சாலைகள் ஒருவரை திருந்தி வாழச் செய்யும் ஒரு இடமாக மாற்றும் பணி முதல்வர் உத்தரவின் பேரில் நடைபெற்று வருகிறது. நூலகங்கள் சிறையில் வளாகங்களில் திருக்குறள் உள்ளிட்ட நல்வழிப்படுத்தும் போதனைகள் கூறப்பட்டு வருகிறது.

நூலகங்களில் வாசிப்பு என்பது சிறைச்சாலைகளில் கட்டாயமாக்கப்பட்டுள்ளது . அது சிறைவாசிகளுக்கு மட்டும் அல்ல, சிறை துறையில் பணியாற்றும் காவலர்களுக்கும் வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பது தான் எங்களுடைய நோக்கம்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையில் உள்ள முருகன் உள்ளிட்டவர்கள் வெளியே வருவது குறித்து எங்கள் கையில் ஏதுமில்லை.

அவர்கள் எந்த நாட்டு பாஸ்போர்ட் வைத்து உள்ளார்களோ அந்த நாடுகளுக்கு செல்ல அனுமதிக்கப்படுவார்கள். அதை ஒன்றிய அரசுதான் முடிவு செய்யும்.

தமிழக அரசு போராடி காவிரி நீரை விவசாயிகளுக்கு பெற்று தரும். யார் அந்த ஆட்சியில் இருந்தாலும் தமிழகத்திற்கு எதிர்ப்பான மன நிலையை தான் அங்கு எடுப்பார்கள்.

தமிழக அரசை பொறுத்த வரை விவசாயிகள் பாடுபட்டு விளைவித்த பயிரை காப்பற்ற என்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ , கண்டிப்பாக நாங்கள் நடவடிக்கை எடுத்து நீரை பெற்றுத் தருவோம்.

பயிர் காப்பீடு அனைத்து பயிர்களுக்கும் செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கு எந்த விதமான பாதிப்பும் ஏற்படாமல் அரசு நடவடிக்கை எடுக்கும்.

நீதிமன்றம் தமிழக லஞ்ச ஒழிப்புத்துறை மீது குற்றச்சாட்டு கூறியுள்ளது குறித்து கருத்து கூறினால் அது நீதிமன்ற அவமதிப்பு ஆகிவிடும். நீதிமன்றம் லஞ்ச ஒழிப்புத்துறை வழக்குகளில் தானாக முன்வந்து வழக்குகளை எடுத்துள்ளது. அந்த விசாரணை என்பது நியாயமான முறையில் எங்களுடைய விசாரணை நடைபெற்றுள்ளது என்று லஞ்ச ஒழிப்புத்துறை வாதங்களை எடுத்துச் செய்யும்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் வழக்கு விசாரணை செய்யாமல் வழக்குகள் முடித்து வைக்கப்பட்டுள்ளன. ஆனால் தி.மு.க. ஆட்சியில் வழக்கு விசாரணை நடைபெற்று சாட்சியங்கள் இல்லாததால் வழக்குகள் விடுதலை செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்குகளில் அதற்கு மேல் சென்றால் எனக்கு பிரச்சினையாகி விடும் என்றார்.

பேட்டியின் போது புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன், எம்.எம். அப்துல்லா எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் வை.முத்துராஜா, எம். சின்னத்துரை ஆகியோர் உடனிருந்தனர்.

## கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்!

# பயனடையும் பெண்டிர் பாராட்டு!

சென்னை, செப்.18-

தமிழ்நாட்டில் குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000 வழங்கப்படும் என்று தி.மு.க. தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு இருந்தது. அதன்படி கடந்த பட்ஜெட்டில் அதற்கான அறிவிப்பை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.



‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்’ என்று அதற்கு பெயரிடப்பட்டதுடன், பேரறிஞர் அண்ணா பிறந்தநாளில் காஞ்சிபுரத்தில் அந்த புதிய திட்டம் தொடங்கிவைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்த திட்டத்தின் மூலம் மொத்தம் 1 கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் மகளிர் பயன் அடைவார்கள். மாதந்தோறும் அவர்களுக்கு தலா ரூ.1,000 வழங்கப்படும்.



இந்த திட்டத்தில் பயன்பெறும் மகளிரின் எண்ணிக்கை ஒரு கோடியைத் தாண்டுவதால், அதிக அளவிலான நிதி பரிவர்த்தனை நடைபெறும். எனவே நிதித்துறை அறிவுறுத்தல்படி முன்கூட்டியே பயனாளர்கள் வங்கி எண்ணுக்கு ஒரு ரூபாய் அனுப்பி, குறுஞ்செய்தியும் அனுப்பிவைக்கப்பட்டது. அதனை பார்த்ததும் இல்லத்தரசிகள் மகிழ்ச்சி அடைந்தனர். சிலர் இனிப்புகளை வாங்கி உறவினர்கள், நண்பர்களுக்கு வழங்கி மகிழ்ச்சியில் திளைத்தனர்.

இந்த நிலையில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான நேற்று முன்தினம் காஞ்சிபுரத்தில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தைத் தொடங்கி வைத்தார். இத்திட்டத்தில் பயனடைந்துள்ள இல்லத்தரசிகள் மகிழ்ச்சி தெரிவித்து இருக்கிறார்கள்.

அதன் விவரம் வருமாறு:

### முதல்வருக்கு நன்றி!



சென்னை கூவம் சாலையைச் சேர்ந்த இல்லத்தரசி வனிதா, ‘எவரையும் எதிர்பார்க்காமல் பெண் தனது சொந்தக்காலில் நின்று சுயமரியாதையுடன் வாழ வேண்டும். அதற்கு உதவும் தமிழ்நாடு முதல்அமைச்சருக்கும், அரசுக்கும் எங்கள் நன்றியை தெரிவித்து கொள்கிறோம். இந்ததொகையைகுடும்பமுன்னேற்றத்திற்கு முழுமையாக பயன்படுத்துவோம். அனைத்து தரப்பு மக்களின் வாழ்வாதாரத்தையும் அரசு உயர்த்த வேண்டும். தமிழக அரசுக்கு நாங்கள் என்றும் துணை நிற்போம்’ என்றார்.

### பயனுள்ள உதவி!

திருவல்லிக்கேணியைச் சேர்ந்த மளிகை கடை ஊழியரின் மனைவி கதீஜா ஜெயிலானி கூறும்போது, ‘ஏழ்மை நிலையில் 3 பெண் குழந்தைகளுடன் வாழ்ந்து வரும் எங்களுக்கு தமிழக அரசு உரிமைத்தொகை வழங்கியதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறோம். குழந்தைகளின் கல்வி, மருத்துவ செலவுக்கு இதனை பயன்படுத்திக்கொள்வோம். இதற்காக முதல்அமைச்சருக்கும், தமிழ்நாடு அரசுக்கும் நன்றியை தெரிவித்து கொள்கிறோம். பெண்களை பொறுத்தமட்டில் அரசு வழங்கி உள்ள உரிமைத் தொகை ஒரு பயனுள்ள உதவியாக இருக்கும். மனம் நிறைந்த நன்றியை தெரிவித்து கொள்கிறேன்’ என்றார்.

### மறக்க மாட்டோம்!

சிந்தாதிரிப்பேட்டையைச் சேர்ந்த காய்கறி வியாபாரி நீலமணி கூறும்போது, ‘காய்கறி வியாபாரம் செய்து பிழைப்பு நடத்தி வரும் எங்கள் குடும்பத்திற்கு உரிமைத்தொகையை வழங்கிய முதல்அமைச்சருக்கும், தமிழ்நாடு அரசுக்கும் எங்களுடைய நன்றியை தெரிவித்து கொள்கிறோம். இந்த தொகை மூலம் எங்கள் குழந்தை களுக்கு நல்ல கல்வியை அளித்து அவர்களை சமுதாயம் மதிக்கும் வகையில் மாற்றுவோம். எங்களுடைய குடும்ப முன்னேற்றத்திற்கும், குழந்தைகள் வளர்ச்சிக்கும் உதவி வரும் தமிழ்நாடு அரசுக்கு என்றும் நாங்கள் கடமைப்பட்டு உள்ளோம். இந்த நன்றியை என்றும் நாங்கள் மறக்க மாட்டோம்’ என்றார்.



### நம்பிக்கை பிறந்தது!

புதுப்பேட்டை பகுதியில் வீட்டு வேலை செய்து வரும் திலகராணி கூறும்போது, ‘வீட்டு வேலை செய்து பிழைப்பை ஓட்டி வரும் எங்களை போன்றவர்களுக்கு தமிழ்நாடு அரசு உரிமைத்தொகையை வழங்குவது உண்மையிலேயே மனதார வரவேற்கத்தக்கது. இதனை வெற்றிகரமாக செயல்படுத்தி வரும் முதல்அமைச்சருக்கும், தமிழ்நாடு அரசுக்கும் எங்களுடைய நன்றியை தெரிவித்து கொள்கிறோம். குடும்பத்தை கவனித்து வந்த என்னுடைய மகன் இறந்துவிட்டான். கூலிவேலை பார்க்கும் கணவருக்கு போதிய வருமானம் இல்லை. வாழ வழி இன்றி தவித்து வந்த எங்களை இப்போது ஏழ்மையில் இருந்து கைதூக்கிவிட்டது போல் முதல் அமைச்சரின் நடவடிக்கை இருக்கிறது. இதனை முழுமையாக வரவேற்கிறோம். எங்களுக்கு இந்த தொகை வழங்கியதில் நானும், என்னுடைய கணவரும் மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கிறோம். இனி சாப்பாட்டுக்கு பிரச்சினை இல்லாமல் வாழ முடியும் என்ற நம்பிக்கையும் பிறந்து உள்ளது’ என்றார்.



### ஒரு கோடி குடும்பத்தினர்!

எழும்பூரைச் சேர்ந்த இல்லத்தரசி மோகனா கூறும்போது, ‘மாற்றுத்திறனாளி மகனுக்கு மருத்துவ செலவுடன் வாழ்ந்து வரும் எங்களுக்கு அரசு வழங்கிய மகளிர் உரிமைத்தொகைக்காக முதல்அமைச்சருக்கும், தமிழ்நாடு அரசுக்கும் எங்கள் குடும்பத்தினர் சார்பில் நன்றியை தெரிவித்து கொள்கிறோம். தொடர்ந்து இதுபோன்ற பல நலத்திட்டங்களை செயல்படுத்தி வரும் முதல்அமைச்சருக்கு பொதுமக்கள் என்றும் நன்றியுடன் இருப்பார்கள். மாதம்தோறும் கிடைக்கும் இந்த தொகை குடும்பத்தில் முக்கியமானதும், பயனுள்ளதுமான ஒரு செலவுக்கு உதவிகரமாக இருக்கும். என்னைப் போன்ற கோடிக்கணக்கான குடும்பத்திற்கு முதல்அமைச்சர் ஒளி ஏற்றி வைத்து உள்ளார். இதற்காக அனைவரும் நன்றி தெரிவிப்பார்கள்’ என்றார்.



நன்றி: **தினத்தந்தி** - 16.9.2023

## குன்னூர் அருகே சிறுத்தை உலா!

ஊட்டி, செப் 18-

குன்னூர் அருகே தேயிலை தோட்டத்தில் உலா வரும் சிறுத்தை வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

நீலகிரி மாவட்டத்தில் வன பகுதிகளில் உள்ள சிறுத்தை, யானை, காட்டு மாடு உள்ளிட்ட பல்வேறு விலங்குகள் உணவு தேடி அடிக்கடி ஊருக்குள் புகுவதால் வனவிலங்கு மனித மோதல் ஏற்படுகிறது.

மேலும், ஊருக்குள் வரும் சிறுத்தைகள், வளர்ப்பு பிராணிகளை வேட்டையாடுவது, மேய்ச்சலுக்கு செல்லும் கால்நடைகளை வேட்டையாடுவது வாடிக்கையாக உள்ளது.

இது தவிர தேயிலை தோட்டங்களில் சிறுத்தைகள் மற்றும் காட்டுமாடுகள் நடமாட்டம் இருப்பதால் தொழிலாளர்கள், விவசாயிகள் தேயிலை பறிக்கும் பணிக்கு செல்ல அச்சப்படுகின்றனர்.

இந்நிலையில், குன்னூர் அருகே கரன்சி பகுதியில் தேயிலை தோட்டம் ஒன்றில் பாறை மீது ஒரு சிறுத்தை ஒய்யாரமாக அமர்ந்திருந்தது. அது அங்கும் இங்கும் உலா வந்தது.

## என் யதார்த்தமான பேச்சு!



“நம்மிடம் 100 ரூபாய் கூட
இல்லையே எனும் போது இப்போது
நமக்கு கிடைத்திருக்கும் 1000
ரூபாயின் அருமை புரியும்...

“உங்க அப்பாட்ட கேக்க முடியாது
மாசம் ஒரு ஆயிரம் ரூவாயாவது
அம்மாவுக்கு தனியா அனுப்பு!”
எதார்த்தமாய் கேட்கும்
அம்மாவின் நிலை புரிந்தோருக்கு
ஆயிரம் ரூபாயின் விலை புரியும்...

வீட்டில் அத்தனை வேலைகளையும்
இழுத்துப்போட்டு செய்தாலும்
‘என்ன பண்றீங்க?’
எனக் கேட்போரிடம்
“வீட்ல சும்மாதான் இருக்கிறேன்”
எனச்சொல்லம்போது
எந்த வருமானமும் பார்க்காமல்
சும்மா இருக்கிறேன் என்பதென
புரிந்தவருக்கு புரியும்
ஆயிரம் ரூபாயின் மதிப்பு...

கை நீட்டுங்கள் கொடுக்கிறோம்
என்பதல்ல...
வங்கிக்கணக்கு காட்டுங்கள்
தேவைப்படும்போது
உரிமையோடு எடுங்கள் என்பதே
உரிமைத்தொகை...
மகளிருக்கு வாழ்த்துகள்!

**விசாலி**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

நீலகிரி **காந்தல்ராஜ்**

செப்டம்பர் 18 (1981)



நீலகிரி மாவட்ட தி.மு.க. செயலாளராகப் பணியாற்றியவர்.

நெருக்கடி நிலையை எதிர்த்து மிசா கைதியாக இருந்தவர்.

இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை கண்டித்து நடைபெற்ற மறியலில் பங்கேற்று சிறையிலிருந்தபோது மரணடைந்தார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.






**வேலூரில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவில் பங்கேற்க, சென்னை - சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து புறப்பட்ட கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை, ரயிலடியில் கழகத்தினரும், பொதுமக்களும் பெருமளவில் திரண்டிருந்து உற்சாகம் பொங்க வழியனுப்பி வைத்த காட்சி.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.9.2023) சென்னையில் நடைபெற்ற காவல்துறை இயக்குநர் / தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் முனைவர் அ.கா.விசுவநாதன், காவல்துறை இயக்குநர் / தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தின் தலைவர் திருமதி சீமா அக்ரவால், தம்பதியரின் மகன் ஹர்ஷ வர்தன் கீர்த்தனா ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் ரவியின் புதல்வர் ர.பிரபாகரன் இரா.இந்துஜா ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி தொண்டாமுத்தூரில் நடைபெற்றது. இம்மணவிழா வரவேற்பில் – கழக இளைஞரணிச் செயலாளரும் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு – மணமக்களுக்கு பூக்கூடை வழங்கி, மணமக்களை வாழ்த்தி உரையாற்றினார். கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., அமைச்சர்கள் சு.முத்துசாமி, மு.பெ.சாமிநாதன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் மற்றும் கழக முன்னணியினர் உடன் உள்ளார்கள்.

### கிருஷ்ணகிரியில்

# கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம் ஏ.டி.எம். கார்டு வழங்கல்

## அமைச்சர் அர.சக்கரபாணி தொடங்கிவைத்தார் தே. மதியழகன் எம்.எல்.ஏ. - ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ.பங்கேற்பு!

கிருஷ்ணகிரி, செப். 18-

கிருஷ்ணகிரியில்கலைஞர் உரிமைத்தொகை திட்டத்தை துவக்கி வைத்து, மகளிர் உரிமைத்தொகை பெறுவதற்கான ஏ.டி.எம். கார்டு மற்றும் தகவல் கையேடுகளை உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார். தே.மதியழகன் ஒய். பிரகாஷ் எம்.எல்.ஏ.க்கள் உடன் இருந்தனர்

எல்லாருக்கும் எல்லாம் என்ற அடிப்படையில் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் செயல்படுத்தாத வகையில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், காலைச் சிற்றுண்டி, புதுமைப்பெண், இன்னுயிர் காக்கும் 48, மக்களைத் தேடி மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களைதமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள் என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கர பாணி பெருமிதம் தெரிவித்தார்.

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் ஊராட்சி ஒன்றியம், ஜெகதேவி ஊராட்சியில், பேரறிஞர் அண்ணா அவர்களின் 115 வது பிறந்த நாளை முன்னிட்டு, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டத்தினை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கர பாணி, மாவட்ட ஆட்சித்தலைவர் கே.எம்.சரயு ,

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் ,கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர்

சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்து, 2000 மகளிர்களுக்கு ஏடிஎம் கார்டு மற்றும் தகவல் கையேடுகளை வழங்கினார்.

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்த நாளை முன்னிட்டு, காஞ்சிபுரம் மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை துவக்கி வைத்து, மகளிர் உரிமைத் தொகை பெறுவதற்கான ஏ.டி.எம். கார்டு மற்றும் தகவல் கையேடுகளை வழங்கினார்.

தொடர்ந்து, கிருஷ்ணகிரி மாவட்டத்தில், பர்கூர் ஊராட்சி ஒன்றியம், ஜெகதேவி ஊராட்சியில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம் துவக்கி வைக்கப்பட்டு, 2000 பெண்களுக்கு மகளிர் உரிமைத் தொகை பெறுவதற்கான ஏ.டி.எம். கார்டு மற்றும் தகவல் கையேடுகள் வழங்கப் பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரி, பர்கூர், போச்சம்பள்ளி, ஊத்தங்கரை, ஒசூர், தேன்கனிக்கோட்டை, சூளகிரி மற்றும் அஞ்செட்டி வட்டத்திற்குட்பட்ட 1094 நியாயவிலைக்கடைகள் மூலம் 5,64,212 ரேசன் அட்டைகள் செயல்பாட்டில் உள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டத்திற்கு இரண்டு கட்டங்களாக 5,64,212 விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு அவற்றில் 4,58,527 நபர்கள் விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்துள்ளனர். அவர்களில் தகுதியானவர்களுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை மாதந்தோறும் ரூ.1000 அவர்களது வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும். கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டப் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் 14.09.2023 அன்று முதலே ரூ.1000 வரவு வைக்கப்பட்டு வருகிறது. மேலும், மகளிர் உரிமைத் தொகையை பெறும் பெண்களுக்கு பிரத்யேகமான ஏ.டி.எம். கார்டு வழங்கப் பட்டுள்ளது. அதனை எவ்வாறு கையாள வேண்டும் என்பது குறித்து அரசு தெளிவுபடுத்தியுள்ளது. ATM பாஸ்வேர்ட் யாருடனும் பகிரக் கூடாது. தொலைபேசி அழைப்புகளில் ATM ன் விவரங்களை தெரிவிக்க கூடாது. OTP போன்ற தகவல்களை யாரிடமும் பகிரக் கூடாது.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட விண்ணப்பதாரர்களின் தகுதிகள் சரி பார்க்கப்பட்டு, அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும், தகுதியின்மைக்கு உள்ளான விண்ணப்பங்கள் ஏற்கப்படவில்லை. விண்ணப்பதாரர்களின் விண்ணப்ப முடிவு நிலை குறித்த குறுஞ்செய்தி விண்ணப்பதாரர்களின் பதிவு செய்யப்பட்ட கைபேசி எண்ணிற்கு 18.9.2023 முதல் அனுப்பி வைக்கப்படும். இவ்வாறு ஏற்கப்படாத விண்ணப்பதாரர்கள் மேல்முறையீடு செய்ய விரும்பினால், குறுஞ்செய்தி பெறப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் இசேவை மையம் வழியாக வருவாய் கோட்டாட்சியருக்கு மேல்முறையீடு செய்யலாம். மேல்முறையீட்டு விண்ணப்பங்கள் 30 நாட்களுக்குள் தீர்வு செய்யப்படும்.

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் மூலம் மாதந்தோறும் கிடைக்கும் ரூ.1000 மூலம் பெண்களின் தங்களது வறுமையை பாதியாக குறைக்கப்படும். கிடைக்கும் நிதியைப் பெண்கள் தங்களது குழந்தைகளின் எதிர்கால சேமிப்பு, கல்வி, ஊட்டச்சத்து மற்றும் மருத்துவச்செலவுகளுக்கு பயன்பெறும் என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கர பாணி தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மணிமேகலை நாகராஜ்,

மாநில அமைப்பு சாரா ஓட்டுனர் அணி செயலாளர் டி. செங்குட்டுவன் , மாநில சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் இ.ஜி. சுகவனம் , மாநில தீர்மான குழு உறுப்பினர் எம்.வி வெற்றி செல்வன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி முருகன் , மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ் ,விவசாய அணி துணை செயலாளர்கள்

டேம். வெங்கடேசன், அரியப்பன் , மாநில இளைஞர் அணி துணை செயலாளர்கள் சீனிவாசன், பிரகாஷ்மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சந்திரன், சாவித்திரி கடலரசு மூர்த்தி , தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பரிதா நவாப் , கிருபாகரன், நாகராசன், பொதுக்குழு உறுப்பினர்கள் பாலன், அஸ்லாம், செந்தில், கோதண்டன், சித்ரா சந்திரசேகர், ஒன்றிய செயலாளர் கோவிந்தன், தனசேகரன், தேங்காய். சுப்பிரமணி, மகேந்திரன், சாத்தமூர்த்தி, ராஜேந்திரன், அறிஞர் , நரசிம்மன் , குண. வசந்தரசு , எக்கூர் செல்வம், குமரேசன், ரஜினி செல்வம்.

பேரூர் கழக செயலாளர்கள் பாபு, தம்பிதுரை, வெங்கடப்பன் , பாபு சிவகுமார் மற்றும் மாவட்ட , ஒன்றிய, பேரூர் கழக அணிகளின் தலைவர்கள் துணைத் தலைவர்கள் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

### விடுதலைப் போராட்ட வீரர் எஸ்.எஸ்.ராமசாமி படையாட்சியார் பிறந்தநாளில் - அவரது

# சமூக நீதிக் கனவுகளை நிறைவேற்றும் ஆட்சியைத் தொடர உறுதியேற்போம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, செப். 18-**

**எஸ்.எஸ்.இராமசாமி படையாட்சியார் அவர்களின் பிறந்தநாளான நேற்று, சமூக வலைதளப் பதிவிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "இராமசாமி படையாட்சியார் அவர்களின் சமூக நீதிக்கனவுகளை நிறைவேற்றும் ஆட்சியைத் தொடர உறுதியேற்போம்!" என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப்பதிவு வருமாறு:-

விடுதலைப் போராட்ட வீரரும், பெருந்தலைவர் காமராசரின் அமைச்சரவையில் உள்ளாட்சித் துறை அமைச்சராகப் பணியாற்றியவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.எஸ்.ராமசாமி படையாட்சியார் அவர்களின் பிறந்தநாளில் தமிழ்நாட்டுக்காகவும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனுக்காவும் அவர் ஆற்றிய பணிகளை நன்றியுடன் போற்றி, அவரது சமூகநீதிக் கனவுகளை நிறைவேற்றும் ஆட்சியைத் தொடர உறுதியேற்போம்.

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



தந்தை பெரியாரின் 145 வது பிறந்த தினத்தையொட்டி சேலத்தில்இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தந்தை பெரியாரின் முழு உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, சமத்துவ நாள் உறுதி மொழி எடுத்துக் கொண்டார். உடன்..வீட்டுவசதி மற்றும் மதுவிலக்கு. ஆயத தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர். எஸ். கார்மேகம் சேலம் மாவட்ட கழக செயலாளர்கள். இரா. இராஜேந்திரன் எம். எல்.ஏ.(சேலம் மத்திய மாவட்டம்) எஸ். ஆர். சிவலிங்கம் (சேலம் கிழக்கு மாவட்டம்) டி.எம். செல்வகணபதி ( சேலம் மேற்கு மாவட்டம்) மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணை செயலாளர். ஆ.க. தருண் உட்பட மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர். பகுதி, கோட்ட கழக நிர்வாகிகள். அணைத்து அணிகளின் நிர்வாகிகள். உள்ளாட்ச்சி மன்ற நிர்வாகிகள். இருந்தனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் ஊராட்சி ஒன்றியம், ஜெகதேவி ஊராட்சியில், பேரறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்த நாளை முன்னிட்டு, கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கும் திட்டத்தினை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி , மாவட்ட ஆட்சித்தலைவர் கே.எம்.சரயு , கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ் ஆகியோர் முன்னிலை துவக்கி வைத்து, 2000 மகளிர்களுக்கு ஏ.டி.எம். கார்டு மற்றும் தகவல் கையேடுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாநில அமைப்பு சாரா ஓட்டுனர் அணி செயலாளர் டி. செங்குட்டுவன் சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் இ.ஜி சுகவனம் , தீர்மான குழு உறுப்பினர் எம். வி .வெற்றிச்செல்வன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மணிமேகலை நாகராஜ் உள்ளிட்ட ஏராளமானோர் உடன் இருந்தனர்.

# திராவிட மாடல் அரசு 35

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**






# இரண்டே ஆண்டுகளில் ஆயிரம் குடமுழுக்கு!

நம் கழக அரசு மகத்தான சாதனை ஒன்றை ஆர்ப்பாட்டமில்லாமல் படைத்திருக்கிறது. ஆம்... ஆயிரம் கோயில்களில் குடமுழுக்கு நடத்தி முடித்திருக்கிறது.

நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான **‘திராவிட மாடல் அரசு’** பொறுப்பேற்ற பிறகு, தமிழர்களின் கலை, பண்பாடு மற்றும் கலாசாரத்தைப் பறைசாற்றும் பெட்டகங்களான திருக்கோயில்களைப் புனரமைத்துப் பாதுகாத்திடும் வகையில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, குடமுழுக்குகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில், ஆயிரமாவது குடமுழுக்காக சென்னை, மேற்கு மாம்பலம், அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோயில் குடமுழுக்கு கடந்த 10-ஆம் தேதி வெகு விமரிசையாக நடைபெற்றிருக்கிறது.

## நூற்றாண்டு கோயில்களுக்குக் குடமுழுக்கு

இந்து சமய அறநிலையத்துறை, தனது நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள தொன்மையான திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளுதல், குடமுழுக்கு நடத்துதல், திருக்குளங்கள், திருத்தேர்கள் மற்றும் நந்தவனங்களைச் சீரமைத்தல், பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துகளை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்தல், திருக்கோயில்களின் வருவாய் இனங்களை முறைப்படுத்தி வசூலித்தல் போன்ற பல்வேறு பணிகளைச் சிறப்பாக மேற்கொண்டு வருகிறது.




திருக்கோயில்களில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆகம விதிப்படி குட முழுக்கு நடத்தப்பட வேண்டும். அதன்படி, குடமுழுக்குகள் நடைபெறாத திருக்கோயில்களைக் கண்டறிந்து திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்தும் பணிகளை முன் எப்போதும் இல்லாத அளவுக்குக் கடந்த 26 மாதங்களில், அதாவது 2021 - ஆம் ஆண்டு மே மாதம் ‘திராவிட மாடல் அரசு’ அமைந்தது முதல், இந்து சமய அறநிலையத் துறை மேற்கொண்டு வருகிறது.

- ❖ 6 திருக்கோயில்கள் 70 ஆண்டுகளுக்குப் பிறகும்,
- ❖ 15 திருக்கோயில்கள் 50 ஆண்டுகளுக்குப் பிறகும்,
- ❖ 15 திருக்கோயில்கள் 30 ஆண்டுகளுக்குப் பிறகும் குடமுழுக்கைக் கண்டுள்ளன.
- ❖ 2021 டிசம்பர் 8 முதல் 2023 செப்டம்பர் 10 வரை 1,030 கோயில்களில் குடமுழுக்கு நடை பெற்றுள்ளது.

குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு அருள்மிகு ஆதி கேசவப் பெருமாள் திருக்கோயில் 400 ஆண்டுகளுக்குப் பிறகும், காஞ்சிபுரம் மாவட்டம், சாத்தனஞ்சேரி, அருள்மிகு கரியமாணிக்க வரதராஜ பெருமாள் திருக்கோயில் சுமார் 300 ஆண்டுகளுக்குப் பிறகும், இராணிப் பேட்டை மாவட்டம், அரக்கோணம் வட்டம், தக்கோலம், அருள்மிகு கங்காதீஸ்வரர் திருக்கோயில் சுமார் 150 ஆண்டுகளுக்குப் பிறகும், திருநெல்வேலி மாவட்டம், அரிகேசவநல்லூர், அருள்மிகு பெரியநாயகி சமேத அரியநாத சுவாமி திருக்கோயில் 123 ஆண்டுகளுக்குப் பிறகும், வேலூர் மாவட்டம், வெட்டுவானம், அருள்மிகு திரௌபதியம்மன் திருக்கோயில் 110 ஆண்டுகளுக்குப் பிறகும், ஐந்து திருக்கோயில்கள் 100 ஆண்டுகளுக்குப் பிறகும் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளன.

## திருப்பணிகளுக்குத் தாராள நிதி

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆயிரம் ஆண்டுகள் முற்பட்ட தொன்மையான திருக்கோயில்களைப் புனரமைத்து திருப்பணி மேற்கொள்ள 2022 - 2023 ஆம் நிதியாண்டில் ரூ.100 கோடியும், 2023 - 24 ஆம் நிதியாண்டில் ரூ.100 கோடியும் அரசு மானியமாக வழங்கியுள்ளார்கள்.

அதன்படி 2022 - 2023 ஆம் நிதியாண்டில் ரூ.140 கோடி மதிப்பீட்டில் 113 தொன்மையான திருக்கோயில்களும், 2023 - 24 ஆம் நிதியாண்டில் ரூ.150 கோடி மதிப்பீட்டில் 84 திருக்கோயில்களும் அரசு மானியம், திருக்கோயில் நிதி மற்றும் உபயதாரர்கள் பங்களிப்புடன் புனரமைத்துப் பாதுகாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**ஜெ**யலலிதா அம்மையாரின் ஆட்சி காலங்களில், அவரது விருப்பம், ராசி, நட்சத்திரத்துக்கு ஏற்ப கணித்து ஒரே நாளில் 10 கோயில்கள். 20 கோயில்களுக்குச் சேர்த்து குடமுழுக்கு நடத்துவர். இப்போது அந்த நடைமுறை இல்லை. அந்தந்த கோயில்களுக்கு ஏற்ப குடமுழுக்கு முடிவு செய்யப்படுகிறது.

மேலும் 100 ஆண்டுகளுக்கு முற்பட்ட சுமார் 30-க்கும் மேற்பட்ட திருக்கோயில்களிலும், தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்த 27 திருக்கோயில்களில் 23 திருக்கோயில்களுக்கும் இரண்டு ஆண்டுகளில் குடமுழுக்கு நடத்திட அனுமதி அளிக்கப்பட்டு திருப்பணிகள் நிறைவுற்று, குடமுழுக்குகள் நடத்தப்பட்டுள்ளன.

## கிராமப்புறக் கோயில்களுக்கும் கவனம்

கிராமப்புற திருக்கோயில்கள் மற்றும் பட்டியலின மக்கள் வசிக்கின்ற பகுதியில் இருக்கின்ற திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் மேற்கொள்ள ஆண்டுதோறும் தலா 1,000 கோயில்கள் என்ற எண்ணிக்கை 1,250 ஆகவும், நிதியுதவி தலா ரூ.1 லட்சம் என்பது ரூ.2 லட்சமாகவும் உயர்த்தப்பட்டு இதுவரை 2,500 கிராமப்புற திருக்கோயில்களுக்கும் 2,500 பட்டியலின மக்கள் வசிக்கின்ற பகுதியில் இருக்கின்ற திருக்கோயில்களுக்கும் ரூ.100 கோடி நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது.

2023 - 2024 ஆம் நிதியாண்டில் திருப்பணி மேற்கொள்வதற்கு 1,250 கிராமப்புற மற்றும் 1,250 பட்டியலின மக்கள் வசிக்கின்ற பகுதியில் இருக்கின்ற திருக்கோயில்களைக் கண்டறியும் பணி நடைபெற்று வருகின்றது.

மாநில அளவிலான வல்லுநர் குழுவால் 7,142 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளன. அதில் 2,235 திருக்கோயில்களில் ரூ.1,120 கோடி மதிப்பீட்டிலான 5,855 திட்ட மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நமக்குக் கடவுள் பிடிக்குமா என்பதை விடக் கடவுளுக்குப் பிடிக்கும் விதத்தில் நாம் நடந்துகொள்கிறோமா என்பதுதான் முக்கியம். கோயிலைக் கட்டிய மகாராணியையே கோயிலுக்குள் விடாத சனாதனத்துக்கு வக்காலத்து வாங்குவோர் மத்தியில் கோயில்களுக்கு இப்படி எல்லாம் தமிழ்நாட்டில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுதான் எல்லோருக்கும் எல்லாம் என்கிற **திராவிட மாடல் அரசு**.

**...சாதனை தொடரும்**

## ஃபிடில் வாசிக்கும் அறிவுச் சமூகம்!

இந்து மதம் என்பதற்கும் இந்துத்துவா என்பதற்கும் இருக்கும் வித்தியாசம் மிகப் பெரியது. தெரிந்தோ தெரியாமலோ பல படித்தவர்களே (academically) இதைப் புரிந்துகொள்ள முயற்சிப்பதுகூட இல்லை. அவர்களைப் பொறுத்தவரை பா.ஜ.க.வை ஆதரிப்பதும், தி.மு.க.வை எதிர்ப்பதும்தான் இந்து மதம் என்று அடம் பிடிக்கிறார்கள்.

எளிதாகச் சொல்ல வேண்டும் என்றால்,

‘மகாத்மா காந்தி ஒரு தீவிர இந்து மதப் பற்றாளர்

நாதுராம் கோட்சே தீவிர இந்துத்துவப் பற்றாளர்’

அறிவுக்குத் துளி சம்பந்தமும் இல்லாத, எந்த வரலாற்று ஆய்வுகளோ, சான்றுகளோ இல்லாத வியாசர், ராமர், அனுமார் கதைகளை உண்மை என்று கொண்டாடுகிறார்கள். வரலாற்றுப் பின்னணியோடு இந்தக் கதைகளை உடைக்க முயற்சித்த அம்பேத்கர், பெரியாரை எல்லாம் பொய்யர்கள் என்று வெறுக்கிறார்கள். ஏன், அவர்கள் இந்த நிலை எடுக்க வேண்டியிருந்தது என்ற சமூகக் காரணங்களைச் சுலபமாக மறந்துவிடுகிறார்கள்.

இதையெல்லாம் கடந்து இந்துத்துவம் கடந்த ஒன்பது ஆண்டுகளில் நாட்டு மக்களுக்கு என்ன செய்திருக்கிறது என்று ஆராய்ந்தால், எப்போதும் இல்லாத அளவுக்கு ஊழல் தலைவிரித்து ஆடிக் கொண்டிருக்கிறது. 140 கோடி மக்களையும் சுரண்டி சில பேர்களை மட்டும் உலகப் பணக்காரர்களாக்கி இருக்கிறது. சாதி வெறியும், மத வெறியும் படித்தவர்களையும் முட்டாளாக்கிக் கொண்டிருக்கிறது. பெரும்பான்மை அறிவுச் சமூகமோ எப்போதும்போல ஃபிடில் வாசித்துக் கொண்டிருக்கிறது.

துயரம்தான்!

**-சுவாமிநாதன் ராஜாமணி முகநூல் பதிவு.**

## ஃப்ளாஷ்பேக்





இராமச்சந்திரன்

### நுழையாத கணையாழி!

1991-ஆம் ஆண்டு ஈரோட்டில் தேர்தல் நிதி அளிப்புக் கூட்டம், அன்றைய மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. அதிக நிதி வசூல் செய்த வட்டக் கழகச் செயலாளர்களுக்குக் கணையாழி அணிவிக்கும் நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணத்தால், தலைவர் கலைஞர் அவர்கள் எனக்கு கணையாழி அணிவித்தார். விரலில் நுழையாத காரணத்தால் “என்னய்யா போக மாட்டேங்குது” என்று கேட்டார். 23 வயது இளைஞனாக இருந்த நான் ஒரு பவுனாக இருந்திருந்தால் போயிருக்கும் என்றேன். தலைவர் கலைஞர் சட்டென்று ‘அதை உங்க கணேசமூர்த்தியிடம் கேளுய்யா’ என்றது சுற்றி இருப்பவர்களைச் சிரிப்பலையில் ஆழ்த்தியது. எத்தனை கடினமான சூழலையும் இலகுவாக்கத் தெரிந்தவர் தலைவர் கலைஞர்.

**-இராமு (எ) பொ.இராமச்சந்திரன், பகுதிக் கழகச் செயலாளர், ஈரோடு.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண் டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033- 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### கலப்புத் திருமண உதவிகள்!

**1975-ஆம் ஆண்டு கலப்புத் திருமணங்களை ஊக்கப்படுத்தும் வகையிலான திட்டங்களைக் கொண்டு வந்தார் கலைஞர். கலப்புத் திருமணம் செய்பவர்களுக்குக் குடும்ப நிதியாக ஏழாயிரம் ரூபாய் நிதி வழங்கப்பட்டது. மணமக்கள் இரண்டு வேறு சாதியினராக இருந்தால் மட்டும் போதாது, இருவரில் ஒருவர் ஆதிக்கச் சாதி எனக் கருதப்படுகிறவராகவும், இன்னொருவர் தாழ்த்தப்பட்ட வகுப்பு எனக் கருதப்படுகிறவராகவும் இருந்து, அவர்கள் அந்தச் சாதிக் கொடுமைகளில் இருந்து விடுபட்டு, சமத்துவ நிலையில் மணம் புரிபவர்களாகவும் இருக்கவேண்டும் என்ற விதிகளை உருவாக்கினார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 244




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131